விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள்,பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
Authorized Agent
உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMNUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670 Fax: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2320)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 28 திங்கட்கிழமை (12.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு




(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் சிவகுமார் கஜேன் (வயது-28) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அவரது வீட்டுக்கருகில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

19

## அரசின் சர்வாதிகார செயற்பாட்டை கண்டித்து இனி நாமும் போராடுவோம்

### எல்லே குணவங்ச தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

பொதுமக்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைமைகள் ஜனநாயக கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது.

இந்நிலை தொடர்ந்தால் மக்களின் அடிப்படை உரிமைகள் கூட பறிபோகும்

19

## கொரோனாச் சட்டங்களை காரணம் காட்டி

# மக்களின் ஆர்ப்பாட்டங்களை தடுப்பதை ஏற்க முடியாது

### ஐ.நா வதிவிடப் பிரதிநிதி அரசுக்கு எச்சரிக்கை



(ஜெனிவா)

**கொரோனா கட்டுப்பாட்டு சட்டங்களை காரணம் காட்டி அமைதியான முறையில் பொதுமக்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களை இலங்கை அரசாங்கம் தடுப்பது ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் எச்சரித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அப்பால்

19

பருத்தித்துறையில் மேலும்

## 18 பேருக்கு கொரோனா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று 18 கொரோனா

19

முல்லைத்தீவில்

## மாணவனை காணவில்லை

பொலிஸில் முறைப்பாடு



19

## கொரோனா +1,492

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,492 பேர் நேற்று அடை

19

மகிந்த தலைமையிலான

## முழு அமைச்சரவையும் சட்டவிரோதமானது

ஓமல்பே சோபித தேரர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த தலைமையிலான முழு அமைச்சரவையும் சட்டவிரோத

19

## கொரோனா உயிரிழப்பு 3,500ஐ கடந்தது

### நேற்றும் 35 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 35 பேர் இலங்கையில் உயிரிழந்துள்ளனர்.

குறித்த நபர்கள் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக கொரோனா ஒழிப்புச் செயலணி தெரிவித்

19

## எதிர்ப்பாளர்களை அடக்குவது ஏற்றுக்கொள்ள முடியாது

### சுதந்திரக் கட்சியும் போர்க்கொடி

(கொழும்பு)

அரச எதிர்ப்பாளர்களை அடக்குவதன் மூலம் மக்கள் கருத்தை மௌனமாக்கும் நடவடிக்கையை இலங்கை சுதந்திரக் கட்சி கண்டித்துள்ளது என அக்கட்சியின் மூத்த துணைத் தலைவர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

19

## பொலிஸார் மீது தாக்குதல்; சுழிபுரத்தில் இருவர் கைது

(அராலி)

சுழிபுரத்தில் உள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தினை முற்றுகையிடச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - வறுத்தோலை பகுதியில் கசிப்பு உற்பத்தியும் வியாபாரமும் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு தகவல்

19

யாழ்.பல்கலைக்கழக

## மாணவர்கள் இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாண

19

மாதிரி இலவச விநியோகம் - 13.07.2021 செவ்வாய்க்கிழமை
Free sample - 500 ml (மட்டுப்படுத்தப்பட்ட அளவு)
தாய்ப்பாலுக்கு நிகரான நமது நாட்டுப் பசும்பாலை கண்ணாடிப்போத்தல்களில் உங்கள் இல்லங்களுக்கே தருகின்றோம்....
100% தூய்மையானது மற்றும் பண்ணையிலிருந்து நேரடி விநியோகம்
குறைந்த சில மணி நேரத்தில் உங்கள் இல்லங்களில்
உங்கள் ஆரோக்கியம் மேம்பட தொடர்பு கொள்ளுங்கள்
KJK 077 555 2805 | 077 414 8805 | 076 006 2805
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 01 முதல்


பதப்படுத்தப்படாத பசும்பால்
(7190)

9 நாட்களில் மட்டும்

## யாழில் 423 பேருக்கு கொரோனாத் தொற்று

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் மற்றும் உயிரிழப்பு தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில் கடந்த ஒன்பது நாட்களில் மாத்திரம் 423 பேருக்கு கொரோனாத்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு
## இரத்தினம் தமிழ்மாறன்
(SLEAS-I)

வடமராட்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக ( திட்டமிடல் பிரிவு ) கடமையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் -I இற்கு பதவியுயர்வு பெற்று முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக 07.07.2021 கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட உயர்திரு **இரத்தினம் தமிழ்மாறன்** மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் சீரும் சிறப்புடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
**குடும்பத்தினர்**

(C-2330)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்
Congratulations!



உயர்திரு
## இரத்தினம் தமிழ்மாறன்
(SLEAS-I)

வடமராட்சி கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து வலயத்தின் கல்வி அபிவிருத்தியில் அரும்பணியாற்றி முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று 07.07.2021 முதல் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட எமது கிராமத்தைச் சேர்ந்தவரும் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக சிரேஷ்ட வீரருமான உயர்திரு **இரத்தினம் தமிழ்மாறன்** அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
புலம் பெயர் வாழ் உறவுகள்
வள்ளுவர் சனசமூக நிலையம்
அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம்
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை
வள்ளுவர் முன்பள்ளி

(C-2331)

அண்ணா சிலையடி,
கரணவாய், கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அபாய நிலைக்கு தள்ளப்படும் நாடு

# மறைக்கப்படும் உண்மைகள்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

**டெல்டா வைரஸ் திரிபு தொடர்பிலான உண்மைத் தரவுகளை சுகாதார அதிகாரிகள் மறைப்பதாலும் சுகாதார வழிகாட்டல்களை பொதுமக்கள் புறக்கணித்துச் செயற்படுவதாலும் நாடு அபாய நிலைக்குத் தள்ளப்படுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சுகாதார அமைச்சு டெல்டா வைரஸ் திரிபு தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்களை வெளியிடவில்லை. அதனால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அறிந்து கொள்ள முடியவில்லை.

இதேவேளை மரபணு விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகமும் தகவல்களை மறைத்து வைத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே கொவிட் - 19 தொற்றிலிருந்து நாடு தற்போது தான் மீண்டு வரும் நிலையில் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே டெல்டா வைரஸால் நாடு அபாய நிலைக்குத் தள்ளப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மருத்துவத்துக்கு மாகாண எல்லை கடக்கலாம்

### அஜித் ரோஹண



(கொழும்பு)

மருத்துவக் காரணங்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்திற்கு அனுமதி வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

எனினும், நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல் அறிக்கைக்கு அமைய மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## மேலும் 1,598 பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 1,598 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 244,437 ஆக அதிகரித்துள்ளது. (நி-5)

## விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

காணி பயன்பாட்டு கொள்கைத்திட்டமிடல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை தொகுதியில் திணைக்களத்துடனான III ஆவது தரத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை-2018 (2021) இற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 15.07.2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது என அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (4-5)

## வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கு தடுப்பூசி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ள பணியாளர்களுக்கு அடுத்த வாரம் முதல் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (நி-5)



தற்போதைய இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு விதையனைத்தும் விருட்சமே இளைஞரணி மற்றும் கருகம்பனை இந்து இளைஞர் கழகம் ஆகியன இணைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுகளின் அனுசரணையில் நடத்திய இரத்ததான முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-செ.ரவிசாந்)

## கொத்தலாவல சட்டமூலம்; அரசிற்கு ஆதரவளிக்கமாட்டோம்

### விமல் அணி திட்டவட்டம்



(கொழும்பு)

கொத்தலாவல சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்க உள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

கொத்தலாவல சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்படாவிட்டால் அதற்கு ஆதரவு அளிக்கப் போவதில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் பிரதி தவிசாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் தாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்த பின் சட்டமூலம் பிற்போடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே விமல் தலைமையிலான அணி அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சீனி, பருப்பு விலைகளை குறைக்க அரசு தீர்மானம்



(கொழும்பு)

மைசூர் பருப்பு மற்றும் சீனி விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக குறைந்த விலையில் பருப்பு மற்றும் சீனியை கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஒரு கிலோ கிராம் பருப்பு 175 ரூபாவுக்கும் ஒரு கிலோ கிராம் சீனி 110 ரூபாவுக்கும் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அழகியவண்ண குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள்ள குடியிருக்கும் மெஸ்சியின் 'முதல் கிண்ண' வெற்றி

## 28 ஆண்டுகளுக்கு பின் ஆனந்த மழையில் ஆர்ஜென்ரீனா



வெற்றிக் கிண்ணத்துடன் குதூகலிக்கும் ஆர்ஜென்ரீனா வீரர்கள்

சர்வதேச அரங்கில் 28 ஆண்டுக்குப் பின் முதன் முறையாக கிண்ணம் வென்றது ஆர்ஜென்ரீனா.

கோபா அமெரிக்க தொடர் இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பிரேசிலை வீழ்த்தியது.

சர்வதேச அரங்கில் மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்ரீனா பெற்ற முதல் கிண்ணம் இதுவாகும்.

தென் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான கோபா அமெரிக்க கால்பந்து தொடர் பிரேசிலில் நடந்தது.

ரியோ டி ஜெனிரோவின் வரலாற்று சிறப்பு வாய்ந்த மரக்கானா மைதானத்தில் நேற்று இறுதிப் போட்டி நடைபெற்றது.

உலகத் தரவரிசையில் 3 ஆவது இடத்திலுள்ள நெய்மரின் பிரேசில் அணி, 8 ஆவது இடத்திலுள்ள மெஸ்சியின் ஆர்ஜென்ரீனாவை எதிர்கொண்டது.

போட்டி ஆரம்பித்த 3ஆவது நிமிடத்தில் கெறமண்டியை 'பவுல்' செய்த பிரேசில் வீரர் பிரெட்டுக்கு 'மஞ்சள் அட்டை' கிடைத்தது. கடந்த காலிறுதி, அரையிறுதியில் 2ஆவது பாதியில் மாற்று வீரராக களமிறங்கிய முன்னணி வீரர் ஏஞ்சல் டி மரியா, இம்முறை ஆர்ஜென்ரீனா பயிற்சியாளர் ஸ்கலோனி, போட்டியின் ஆரம்பத்திலேயே களமிறக்கினார்.

இதற்கு நல்ல பலன் கிடைத்தது. போட்டியின் 21ஆவது நிமிடம் டி பால் நீண்ட தூரத்தில் இருந்து கொடுத்த பந்தை பெற்ற மரியா, அங்கிருந்த பிரேசில் பின்கள வீரர்கள் தியாகோ சில்வா, லோடி, மார்குயினோசை தாண்டி கொண்டு சென்றனர்.

அதே வேகத்தில், வேகமாக முன்வந்த கோல் கீப்பர் எடர்சன், தலைக்கு மேலாக பந்தை இடது காலால் உதைக்க, சூப்பர் கோலாக மாறியது. ஆர்ஜென்ரீனா அணி முதல் பாதியில் 1-0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதியில் ஆர்ஜென்ரீனா கோல் கணக்கை சமன் செய்ய நெய்மர் உள்ளிட்ட பிரேசில் வீரர்கள் எடுத்த எந்த முயற்சிக்கும் பலன் கிடைக்க வில்லை.

முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, கோபா அமெரிக்க தொடரில் சம்பியன் ஆனது.

## 'முதல் மகுடம்'



கோல்டன் பூட் விருதுடன் லியோனல் மெஸ்சி

கால்பந்து 'ஜாம்பவான்' ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி, 2005 முதல் சர்வதேச அரங்கில் ஒரு கிண்ணம் கூட வென்று கொடுத்தது இல்லை. 2014 உலக கிண்ணம், 2007, 2015, 2016 கோபா தொடரின் பைனலில் தோல்விதான் கிடைத்தது. தற்போது இவரது தலைமையிலான அணி, ஆர்ஜென்ரீனா அணிக்காக முதல் கோப்பை கைப்பற்றி அசத்தியது. இத்தொடரில் 4 கோல் அடித்த மெஸ்சி, சக வீரர்கள் 5 கோல் அடிக்க உதவினார். இவருக்கு தொடர் நாயகன், தொடரின் சிறந்த வீரர் விருது கிடைத்தது. ஏஞ்சல் டி மரியா, ஆட்ட நாயகன் ஆனார்.

### 1993க்குப் பின்...

ஆர்ஜென்ரீனா அணி கடைசியாக 1993இல் கோபா அமெரிக்க தொடரில் கிண்ணம் வென்றிருந்தது. இதன் பின் உலக கிண்ணம் உட்பட சர்வதேச தொடர்களில் எவ்வித கிண்ணத்தையும் வெல்லவில்லை. தற்போது 28 ஆண்டுக்குப் பின் முதன் முறையாக கோபா கிண்ணம் வென்று அசத்தியது.

### 15

கோபா அமெரிக்க தொடரில் 15 ஆவது முறையாக சம்பியன் ஆனது ஆர்ஜென்ரீனா.

இத்தொடரில் அதிக கிண்ணம் வென்ற உருகுவேயின் (15) சாதனையை சமன் செய்தது. அடுத்த இடத்தில் பிரேசில் (9 முறை) உள்ளது. பராகுவே, சிலி, பெரு அணிகள் தலா 2 முறை கிண்ணம் வென்றுள்ளன.

### 28 ஆண்டுகளுக்கு பின்...

ஆர்ஜென்ரீனா அணி கடைசியாக 1993ல் கோபா அமெரிக்க தொடரில் கிண்ணம் வென்றிருந்தது. அப்போது மெஸ்சி 6 வயது சிறுவனாக இருந்தார். இதன்பின் உலகக் கிண்ணம் உட்பட சர்வதேச தொடர்களில் எவ்வித கிண்ணத்தையும் வெல்லவில்லை. தற் போது 28 ஆண்டுக்குப் பின் முதன் முறையாக கோபா கிண்ணம் வென்று அசத்தியது.


அகவை அறுபதில்

வாழ்த்துகின்றோம்

2021.07.12



திருமதி சந்திரவதனா நவரத்தினம் SLTS -1

மூன்று தசாப்தங்களாய் முத்தான சேவை செய்து
முல்லை நகரின் சைவத்தை தளைக்க வைத்து
சாதித்த சாதனைகள் சரித்திரத்தில் இடம்பிடிக்கும்
வாழும் காலங்கள் வளமுடன் அமைய - என்றும்
வாழ்த்துகின்றோம் வாழ்க வாழ்கவென்று

சேவை விபரம்

மு/ கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பா
15.03.1990 - 31.12.1994 வரை
மு/ ஆனந்தபுரம் அ.த.க.பா
01.01.1995 - 31.12.1999 வரை
மு/ முல்லைத்தீவு இ.த.க.பா
01.01.2000 - 19.02.2001 வரை
மு/ சிவநகர் தமிழ் வித்தியாலயம்
20.02.2001 - 16.01.2012 வரை
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
17.01.2012 - 12.07.2021 இன்று வரை

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
புதுக்குடியிருப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகவுள்ள பதவிகள்

(கொழும்பு)

அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரின் வசமிருக்கும் அமைச்சுகளில் சிலவற்றை அவ்விருவரிடமிருந்தும் அபகரிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறிய முடிகின்றது.

அவ்விருவரிடமிருந்தும் மாற்றப்படும் அமைச்சின் விடயதானங்களுக்கு அமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மேலும் 3 அமைச்சுகளை வழங்குவதற்கு ஆலோசித்து வருகிறது.

நிதியமைச்சராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதன் பின்னர், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை விரைவுபடுத்தி, இலக்கை எட்டிக்கொள்வதற்கு புதிய அமைச்சரவை மாற்றமொன்றை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

அதனடிப்படையில், ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணியின் கீழான ஒப்பந்தங்களின் அடிப்படையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்பட வேண்டிய அமைச்சுப் பதவிகளை, அக்கட்சிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசாங்கத்தால் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் அமைச்சுகளை பொறுப்பேற்றுக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளதாகவும் இதேவேளை புதிய



அமைச்சரவை மாற்றத்தில் சுகாதாரம், பொலிஸ், தொழில் மற்றும் கல்வி ஆகிய அமைச் சுக்களில் மாற்றங்கள் ஏற்படுத் தப்படுமென தகவல்கள் தெரி விக்கின்றன. (நி-5)


## பெறுகை அறிவித்தல்
## வேலணை பிரதேசசபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தித்திட்டம்

**வேலையின் பெயர்:- ஆவரை வீதி திருத்தம்**
**ஒப்பந்த இல:- NP/14/41(18)/2/PSDG/2021/02**

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தித் திட்டம் எனும் திட்டத்திற்காக நிதியினைப் பெற்றுள்ளதுடன் இந்நிதியின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆவரை வீதி திருத்தம் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வேலணைப் பிரதேசசபை, வங்களாவடி வேலணை. தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி திருத்த வேலைக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/செயலாளர், வேலணைப் பிரதேசசபை தொலைபேசி: 021 221 1505, தொலைநகல்: 021 221 1506, மின்னஞ்சல்- velanaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.07.12 ஆம் திகதியில் இருந்து 2021.07.26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் பகுதி 5 (Schedule) இல் காட்டப்பட்டுள்ளது.

05. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் பெருந்தெருக்கள் அபிவிருத்திக்கான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர்/செயலாளர், வேலணைப் பிரதேசசபை, வேலணை எனும் இடத்திலிருந்து 2021.07.12 ஆம் திகதியிலிருந்து 2021.07.26 வரை காலை 09.00 மணிக்கும் 14.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்விகள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி, பிரதி) தயாரிக்கப்பட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வேலணைப் பிரதேசசபை வேலணை எனும் முகவரிக்கு 2021.07.27 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்வி இலக்கம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.07.19 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வேலணை பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு சமர்ப்பித்த இறுதி திகதியில் இருந்து செல்லுபடியாகும் காலம் | | பிணைவைப்பு (ரூ) | |
| | | | | | செல்லுபடியாகும் காலம் | திகதி | பிணை வைப்பு தொகை | செல்லு படியாகும் காலம் |
| NP/14/41(18)/2/PSDG/2021/02 | ஆவரை வீதி திருத்தம் | 2.743 Mn | 60 நாட்கள் | C8 or C7 (பெருந்தெருக்கள்) | 63 நாட்கள் | 28.09.2021 | 27,500/= | 26.10.2021 |

09. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்ற கேள்வியானது மதிப்பீட்டுத் தொகை 50 மில்லியனுக்கு குறைவானதாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA இனது தர முன்னுரிமை பொதுநிதி அறிக்கைகள் 4/2016(iii) உம் பொது நிதி அறிக்கை 3/2020 மற்றும் 3/2020(i) திகதிகள் முறையே 09.10.2020 மற்றும் 11.01.2021 பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**வேலணை பிரதேசசபை,**
**வடமாகாணம்.**
**2021.07.12**

(C-2319)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்றூரிகை, பேனைகளை மீள் சுழற்சி செய்யும் திட்டம்

சுற்றாடல் அமைச்சு அறிமுகப்படுத்தியது

(கொழும்பு)

நாட்டில் பாவிக்கப்பட்ட பற்றூரிகை மற்றும் கார்பன் பேனைகளை சேகரித்து மீள் சுழற்சி செய்யும் புதிய வேலைத்திட்டமொன்றை சுற்றாடல் அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இவை இரண்டும் மண்ணில் உக்குவதற்கு சுமார் 400 வருடங்கள் எடுப்பதாக ஆய்வுகள் தெரிவித்ததையடுத்து மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே சுற்றுச் சூழலில் வீசி எறியப்படும் பற்றூரிகை மற்றும் கார்பன் பேனைகளை சேகரித்து அவற்றை மீள் சுழற்சி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி பொருட்களை சேகரிப்பதற்கென விசேட கொள்கலனொன்றையும் சுற்றாடல் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. (நி-5)

## ஜனாதிபதியை சந்திக்கும் சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி ஜனாதிபதி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதிநிதிகளுக்கு இடையேயான சந்திப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்றெவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## சேதனப்பசளை தொடர்பான அரசின் முடிவில் மாற்றமில்லை

(கொழும்பு)

நாட்டில் இரசாயன பசளைப் பயன்பாட்டை இரத்து செய்து சேதனப் பசளை பயன்பாட்டை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் திட்டம் எவருக்காகவும் மாற்றப்பட மாட்டாது என நிதியமைச்சர் பசில் ராஜக்ஷ தெரிவித்தார்.

இந்த சேதனப்பசளை தொடர்பான அரசின் முடிவில் மாற்றம் இல்லை, இவ் வகையான புதிய புரட்சிக்கு முட்டுக்கட்டைகளை போட சில தரப்பினர் முயற்சித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரசாயன பசளைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாக சில இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட செய்திகளில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதன் மூலம் இலாபமீட்டிய தரப்புக்கள் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் கொழும்பு ஊடகங்களிடம் தெரிவித்தார். (நி-5)

# பொது முடக்கல் நிலையால் யாழில் டெங்கு பரவல் குறைவு

## மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

**கொவிட் தொற்று பரவலால் ஏற்பட்ட பொது முடக்கம், சமூக முடக்கம், போக்குவரத்துக் கட்டுப்பாடு என்பவற்றால் யாழில் டெங்கு நோய் பரவல் குறைவடைந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் நடைபெறாமை, தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களின் வரவு குறைந்தமையும் டெங்கு பரவல் குறைய வழிவகுத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். மாநகர சபையின் செயற்பாடும் வெளிக்களச் சுகாதாரப் பணியாளர்களது சேவையும் டெங்கு பரவல் குறைய பிரதான காரணியாகவும் அமைந்துள்ளது.

நடப்பாண்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 6 மாதங்களில் 48 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதில் அதிகபடியாக ஜனவரி மாதத்தில் 14 நோயாளரும் மே மாதத்தில் 11 நோயாளரும் இனங்காணப்பட்டனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையுடன் சுற்றுச்சூழல் சுகாதாரமும் டெங்கு பெருகும் இடங்களை உருவாக்காத தன்மையும் எதிர்வரும் 6 மாதங்களுக்கு காணப்படுமாயின் யாழில் டெங்கு தொற்று அதிகரிப்பதற்கான



சாத்தியக்கூறு மிகக் குறைவு.

எனவே மழை காலங்களில் பொதுமக்கள் இவ்வாறானதொரு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-7-6)


# ஏ.ரி.எம்.இயந்திரங்களை பொருத்த நடவடிக்கை

(சாவகச்சேரி)

நெடுந்தீவு மக்களின் பணப்பரிமாற்ற தேவையை இலகுபடுத்தும் முகமாக இலங்கை வங்கியினர் நெடுந்தீவில் பண வைப்பு மற்றும் பணம் மீளப் பெறும் இயந்திரங்களைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளது.


கடந்த மார்ச் மாதம் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் பங்குபற்றுதலுடன் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் நெடுந்தீவுப் பிரதேசத்தின் 2021ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பணப் பரிமாற்ற இயந்திரத்தின் தேவை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வந்ததனை அடுத்து இராஜாங்க அமைச்சர் பணப்பரிமாற்ற இயந்திரம் பொருத்த நடவடிக்கை எடுத்து தற்போது நெடுந்தீவு இலங்கை வங்கிக் கிளையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (4-7-6-30)



யாழ். மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் சங்கானை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

# குறிகாட்டுவான் கடற்கரையில் இந்திய மருத்துவக் கழிவுகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் கடற்கரை பகுதிகளில் மருத்துவ கழிவுகள் கரையொதுங்கி வருகின்றன. இந்திய மருத்துவ கழிவுகளே இவ்வாறு கரையொதுங்குகின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நயினாதீவு கடற்கரை பகுதிகளிலும் பெருமளவான மருத்துவ கழிவுகள் கரையொதுங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-7-33)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தரச் சான்றிதழ் கற்கை நெறிக்குரிய 2021 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரியூடாக 03.08.2021 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அறிய இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினை 021 222 3374 என்ற தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு மதிப்பளிக்காத அரசாங்கம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இல்லாத காலங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தியது. ஆனால் தற்போது அரசிற்கு எதிரான ஜனநாயக ரீதியிலான வன்முறையற்ற போராட்டங்களை ஏற்றுக் கொள்ளாமை அல்லது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றமை ஜனநாயக நாடு என்பதனை கேள்விக் குறி யாக்கியுள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நாட்டு மக்களினதும் கல்விக்கொள்கைகளினதும் எதிர்கால நலன்களை கருத்தில் கொள்ளாது தான்தோன்றித்தனமாக சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்த நினைப்பது ஜனநாயக விரோத செயற்பாடாகும்.

தற்போது ஏற்படுத்தப்படவுள்ள சட்டமூலங்கள் ஒட்டுமொத்த நாட்டின் கல்விக் கொள்கைகளை கேள்விக் குறியாக்கியுள்ளது. இதனை ஒரு சமூகமன்றி பல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்காகவே ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மக்களினதும் சமூகங்களினதும் கருத்துக்களுக்கு எந்தவித மதிப்பும் அளிக்காத அரசாங்கமே இப்போது ஆட்சியில் இருப்பது வெளிச் சமாகியுள்ளது.

மாணவர்கள் இழந்து போன கல்வியை மீட்டெடுக்க அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்கின்ற பணிகளைக்கூட இந்த அரசு மதிப்பதாக இல்லை.

அரசாங்கம் ஜனநாயக வழிமுறைகளுக்கு மதிப்பளிப்பதோடு அனைத்துச் சமூகமும் ஏற்கக்கூடிய வகையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும்என கேட்டுக்கொள்கின்றோம். இல்லையேல் ஒரு சாரரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டு மக்களாலும் முன்னெடுக்கப்படும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-7-104)

அரியாலை கிழக்கு காரைமுனங்கு இந்து மயானத்தை கடந்த புதன்கிழமை நேரடியாகச் சென்று யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பார்வையிட்டார். (படம்: ரவிசாந்)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வலுவானதொரு தரப்பாக தமிழ்த்தேசியத்தரப்புகள் இருக்க வேண்டும்

## -ரெலோவின் நிலைப்பாடு இதுவே என்கிறார் சுரேந்திரன்-

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பொதுத்தளமொன்றில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து பணியாற்றுவதையே இலக்காக கொண்டு ஒருங்கிணைக்கும் பணியை ரெலோ முன்னெடுத்துள்ளதே தவிர, எந்தவொரு அரசியல் கட்சிகளினதும், கூட்டுக்களினதும் கட்டமைப்புக்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று ரெலோ தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ரெலோவின் முயற்சியில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, புளொட், ரெலோ மற்றும் தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி ஆகிய தரப்புக்கள் பொதுத்தளத்தில் பணியாற்றுவது பற்றி பேச்சுக்களை முன்னெடுத்திருந்தன. இந்நிலையில் கொழும்பில் கூடிய தமிழரசுக்கட்சியின் அரசியல் பீடத்தில் இவ்விடயம் சம்பந்தமாக பலத்த விமர்சனங்களும் எதிர்மறையான நிலைப்பாடுகளும் பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கட்சிகளை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்த ரெலோ அடுத்த கட்டமாக எவ்விதமான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது என்பது தொடர்பில் வினவியபோது அக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியத்தளத்தில் உள்ள அனைத்துக்கட்சிகளும் மக்களின் பிரச்சினைகள் விடயத்தில் ஒரே நிலைப்பாட்டினையே கொண்டிருக்கின்றன என்பது அத்தரப்புக்கள் பல்வேறு இடங்களில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள், செயற்பாடுகள் மூலமாக உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

அவ்வாறான நிலையில் தான் ரெலோ பொதுப்பிரச்சினைகள் தொடர்பில் பொதுத்தளமொன்றில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படுவதென்றும் பிரதான விடயங்களான வடக்கு-கிழக்கு இணைப்பு, இனப்பிரச்சினைத்தீர்வு உள்ளிட்ட விடயங்களில் இணக்கப்பாட்டை எட்டக்கூடிய விடயங்களில் இணைந்து செல்வதென்றும் கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள அரசியல் தரப்புக்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை முன்னெடுத்தது.

இந்தச் செயற்பாடானது புதிய கூட்டொன்றை முன்னெடுப்பது என்று கருதுவது தவறானதாகும். எந்தவொரு அரசியல் கட்சியும், கூட்டுக்களும் தமது கட்டமைப்புக்களை மாற்ற வேண்டியதில்லை. அக்கட்சிகளும், கூட்டுக்களும் இணைந்து செல்லக்கூடிய விடயங்களில் இணைந்து செயற்பட முடியும் என்ற புரிதல் முதலில் ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது.

குறிப்பாக, தமிழரசுக்கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் இந்த விடயத்தில் சந்தேகங்களின்றி சரியான புரிதலைக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

அதேநேரம், கடந்த காலத்தில் நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தையின்போது ஆயுத விடுதலை இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தே பேச்சுக்களில் ஈடுபட்டன. திம்புக் கோட்பாட்டை உருவாக்கியிருந்தன.

அண்மைய காலங்களில் கூட கொள்கை அளவில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அங்கீகரிப்பதை மறுதலித்திருந்த தரப்புக்கள் அவர் தலைமையில் நடைபெறும் அரச எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்துள்ளன.

ஆகவே, தற்போதைய நிலைமையில் தமிழ் மக்களின் விடயங்களை கையாள்வதற்கு வலுவானதொரு தரப்பாக தமிழ்த் தேசியத்தரப்புக்கள் இருக்க வேண்டும் என்பதே ரெலோவின் நிலைப்பாடே தவிரவும் அதற்கு அப்பால் எவ்வித மான தனிப்பட்ட அரசியல் நலன்களும் இல்லை என்றார். (நி-5)

# ஆதனப்பெயர் மாற்றம்

இல 34/1 கலீமா வீதி யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 21 ம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையால் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் மொகிதீன் பாலா முகமது ஜசைன் தம்பி மகள் அகமதா என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு ரசீன் முகமட் இமாம் (Razeen Mohamed Imam) முகதாவில் 31.08.2019 ஆம் திகதிய 1787 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முகம்மது அமீன் அகமதா (Mohamed Ameen Agamathe) தானே இவ்வாதனத்தின் உரித்தாளர் என வெளிப்படுத்தி பிரதம நொத்தாரிசு ரசீன் முகம்மது முகதாவில் 17.10.2019 திகதியில் 1793 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் முகம்மது அமீன் முகம்மது சபீர்க்கு நன்கொடை வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் பிரசித்த நொத்தாரிசு தி.கணாதீபன் முகதாவில் வரையப்பட்ட 1811 இலக்க 22.10.2020 திகதிய அறுதி உறுதி மூலம் நீராவிப்பிட்டி மேற்கு முள்ளியவளையினை சேர்ந்த முகம்மது அமீன் அகமதா மற்றும் 15C/15 மூர் வீதி, நிந்தனி, புத்தளத்தினைச் சேர்ந்த முகம்மது அமீன் முகம்மது சபீர (மறுநாமம் முகம்மது அமீன் அலிசபீர்) ஆகியோர் 145 மனிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தினை சேர்ந்த முகம்மது சுல்தான் முகம்மது ஜமால்தீன் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேற்கு "பிராயடியும் புளியடியும்" நில.பர.0 குளி 13.94 ம் கிணறும் கழிவறையும் செய்பயிர், வான்பயிர்களும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் J.H.R. பேரின்பநாயகம் அவர்களினால் 26.01.1979 ஆம் திகதி 2526 ம் இலக்கத்தில் வரையப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டது. இதன் எல்லை,

கிழக்கு:- மயில்வாகனம் பெண் லட்சுமியம்மாவின் ஆதனம்
வடக்கு:- அசானர் ஹமீடின் ஆதனம்.
மேற்கு:- குறித்த 2526ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட ஆதனம்.
தெற்கு:-குறித்த 2526ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 6 எனச்சுட்டப்பட்ட பொதுவான பாதை ஆதனமும் துண்டு 3 எனச்சுட்டப்பட்ட ஆதனமும்.

தற்போது முகம்மது சுல்தான் முகம்மது கமால்தீன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின், பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முகம்மது சுல்தான் முகம்மது கமால்தீன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(G.2318)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ். சூரி 2 இல்<br>தகைமை/தொழில்: விண் பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும் (அமெரிக்கா, கனடா)<br>தொ.இ: B/11906 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 63 செவ் 8 சூரி 11 இல்<br>உயரம்: 159 cm<br>தகைமை/தொழில்: BSc,Demon<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச தொழில், உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/11912 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 29 ¾ செவ் 3 சூரி 5 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்: HNDE பல்கலைக்கழக ஆய்வுகூட பொறுப்பாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் பெண்<br>தொ.இ: B/11909 | பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 18 ¼ செவ். சூரி 4 இல்<br>உயரம்: 158 cm<br>தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச தொழில்<br>தொ.இ:G/11913 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 26 செவ் 5 சூரி 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HNDE Work-TO (GOV)<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/11911 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38 செவ். சூரி 2 இல் உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:தனியார் காப்புறுதி நிறுவனம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அதிக விருப்பம், நற்குணம்<br>தொ.இ:G/11914 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 28 செவ் 9 சூரி 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BBA,Assistant Accountant (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு: தகுந்தவரன்,அவுஸ்திரேலியா, இலங்கை மட்டும்<br>தொ.இ: B/11915 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 41 செவ்.சூரி 7 இல் உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L அழகுக்கலை டிப்ளோமா<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு ஆயின் - லண்டன்<br>தொ.இ:G/11917 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக உரிமை மறுப்பிற்கு எதிராக அணிதிரள்வோம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**நாட்டின் அனைத்துத் துறைகளிலும் தனியார்மயமாக்கமும் இராணுவமயப்படுத்தலும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த சூழ்நிலையிலேயே மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.**

உரத் தட்டுப்பாட்டிக்கு எதிராகவும் விலைவாசி உயர்வுக்கு எதிராகவும் சுகாதாரத் துறையினர் எதிர்நோக்கும் இடர்பாடுகளைத் தீர்க்கக் கோரியும் கல்வித்துறையை தனியார் மயமாக்கும் அதற்கும் மேலாக இராணுவமயமாக்கும் முயற்சிகளுக்கு எதிராகவும் இடம்பெற்ற போராட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் அடாவடித்தனங்களையும் அத்துமீறிய கைதுகளையும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் கட்டுப்பாடின்றி அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் சாதாரண மக்களின் வாழ்வில் பெரும் சுமையாக மாறி வருகிறது.

மறுபுறம் கொரோனா சூழலும் அரசின் எதேச்சதிகாரத் தீர்மானங்களும் நாட்டில் வாழும் மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், தினக்கூலி உழைப்பாளர்கள், அரச ஊழியர்கள், தனியார் துறையினர் என அனைத்து உழைக்கும் மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. அதேவேளையில் கொரோனா திரைமறைவில் நிறைவேற்று அதிகாரத்தையும் பெரும்பான்மை பலத்தையும் பயன்படுத்தி நாட்டின் வளங்களை சொத்துக்களையும் கொள்ளையடிக்கவும் வெளிநாடுகளுக்கும் பெரும் பல்தேசிய நிறுவனங்களுக்கும் தாரைவார்ப்பதற்குமான சட்டங்களை ஆக்கிக் கொள்ள அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகின்றது.

அத்தோடு நாட்டின் அனைத்து துறைகளிலும் தனியார் மயமாக்கமும் இராணுவமயப்படுத்தலும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த சூழ்நிலையிலேயே மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆனால் அரசு மக்களின் கோரிக்கைகளுக்கு நியாயத்தையும் நீதியையும் பெற்றுக் கொடுப்பதற்கு பதிலாக, தமது அதிகாரப் பலத்தைக் கொண்டு குறைந்தபட்ச ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எனவே எமது அடிப்படை ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க இன,மத,மொழி பேதம் கடந்து அனைத்து உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (7-4-6)

# முல்லைத்தீவு நகரிற்கு

## உள்ளூர் பேருந்து சேவை அவசியம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரிற்குள் உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் வருகை தருவது அவசியமானது என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூர் பேருந்துகள் முல்லைத்தீவு நகரிற்குள் சென்று திரும்புவதன் மூலம் மாவட்டத்தின் மக்கள் பெரும் நன்மையடைவார்கள். உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்வது இலகுவானது. ஆனால் புதிய பேருந்து நிலையத்துடன் பேருந்து சேவைகள் நிறைவு பெறுவதன் காரணமாக முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தித் தான் தமது பொருட்களை முல்லைத்தீவு பொதுச் சந்தைக்குக் கொண்டு செல்ல வேண்டி உள்ளது.

ஏனைய மாவட்டங்களில் இந்நிலைமை காணப்படுவதில்லை. ஆனால் முல்லைத்தீவு நகரில்தான் இவ்வாறான நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளை முல்லைத்தீவு நகரிற்குள் சென்று திரும்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவை நிரந்தர நடவடிக்கையாகவும் அமைய வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-350)

## சட்டவிரோத செயற்பாட்டை கட்டுப்படுத்த

# கொக்காவில் பகுதியில் காவலரண்கள் அமைக்கப்பட வேண்டும்

(அக்கராயன்)

கடந்த பத்தாண்டுகளாக ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் தொடர்கின்ற மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு கொக்காவில் புகையிரத வீதிக்கருகில் பொலிஸ், இராணுவ காவலரண் அமைக்கப்பட வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகளினால் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது பழைய முறிகண்டி சந்தியில் பொலிஸ், இராணுவ காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது தவறான இடத்தில் அமைந்துள்ளது. கொக்காவில் புகையிரத வீதிக்கருகில் குறித்த காவலரண் அமையுமானால் மூன்று கிராமங்களின் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்த முடியும். தற்போது புத்துவெட்டுவானில் இருந்து மணல் வெளியிடங்களுக்குச் செல்கின்றது.

இதனைத் தடுப்பதற்கு கொக்காவில் புகையிரத வீதிக்கருகில் பொலிஸ், இராணுவ காவலரண் அமைவதன் மூலம் மணல், மரக்கடத்தல்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் என புத்துவெட்டுவான் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மணல், மரக்கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பயனற்ற நிலையிலேயே கொக்காவில் பகுதியில் புகையிரத வீதிக்கருகில் பொலிஸ், இராணுவ காவலரண் அமைய வேண்டும் என்பது புத்துவெட்டுவான் மக்களின் கோரிக்கையாகும். (7-4-350)

# தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு பொருட்கள் வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 33 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்..

இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இவர்களில் 16 பேர் கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மற்றும் பௌத்த துறவி உள்ளிட்டவர்கள் கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மாற்று உடைகள், காலணிகள் அற்ற நிலையில் இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையினால் அவர்களுக்கான உடு புடைவைகள் உள்ளிட்ட பொருட்கள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கேப்பாபிலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் விமானப்படையினர் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (7-4-350)

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் விரைவில் தரமுயர்த்தப்பட வேண்டும்

(அக்கராயன்)

கல்முனை தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல் கோரிக்கையானது நிறைவேற்றப்பட வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1989 இல் அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் முயற்சியில் உருவாக்கப்பட்டது கல்முனை வடக்கு பிரதேச செயலகம். அப்போது இதனுடன் சேர்த்து இருபதுக்கு மேற்பட்ட உப பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன.

அவை அனைத்தும் தற்போது நிதி மற்றும் காணி அதிகாரங்களைக் கொண்ட பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டும் இன்னும் தரமுயர்த்தப்படாமல் நிதி மற்றும் காணி அதிகாரங்கள் அற்ற செயலகமாகக் காணப்படுகின்றன.

1993 ஆம் ஆண்டில் இருந்து பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் தமிழ்த்தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இது வெறும் முயற்சியாகவே இன்றுவரை காணப்படுகின்றது.

எனவே தற்போதைய அரசாங்கத்தால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும் என நம்புவதாகவும் தரமுயர்த்தல் செயற்பாடு விரைவில் நடைபெற வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (7-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

12.07.2021
ஆனி 28, திங்கட்கிழமை
துதியை முற்பகல் 8.10 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 3.26 மணிவரை
சுபநேரம் 11.59-1.29 மணிவரை
இராகுகாலம் - 7.29-8.59 மணிவரை
சந்திராஷ்டமம் - பூராடம், உத்தராடம்

வளவன்

**மேஷம்** – தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** – கடினமான வேலைகளைக் கூட எளிதில் செய்து முடிப்பீர்கள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**கடகம்** – இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, போசன சுகமுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**சிம்மம்** – பயணங்களில் விழிப்புணர்வு தேவை, விருந்தினர் வருகையால் சுப விரயங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்** – செய் தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** – வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** – எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மகரம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**கும்பம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**மீனம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்கள் இனிது கைகூடும், கட்டடப் பணிகள் தொடரும்.

இன்றைய நாளை தனதென அமைப்பவரே இன்ப மனிதன்

# பல கோடி ரூபாய் மோசடி செய்த பெண்

(கொழும்பு)

ஜப்பானில் தொழில் பெற்றுத்தருவதாக கூறிபண மோசடி செய்த பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நாட்டில் பல பகுதிகளில் இவர் இவ்வாறு பணமோசடி செய்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

ஜப்பான் நாட்டில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பல கோடி ரூபா பண மோசடி செய்தமை குறித்து கடுவெல பகுதியில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நவகமுவ பகுதியைச் சேர்ந்த இருவருக்கு 8 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமையவே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபருக்கு எதிராக பண மோசடி குறித்து 32 வழக்குகள் உள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதுடன், 17 பிடியாணை உத்தரவுகளும் விடுக்கப்பட்டிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது. சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (7-5)

# சினோபார்ம் டெல்டாவில் இருந்து பாதுகாக்கும்-சன்ன ஜெயசுமன

(கொழும்பு)

சினோபார்ம் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் டெல்டா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கையில் பெரும்பாலும் சீன தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசி மாவட்ட ரீதியில் மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்த தடுப்பூசி டெல்டா வைரஸ் திரிபுக்கு எதிராக செயற்படும் திறன் கொண்டது என்பது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7-5)

# நீராவியடி பிள்ளையார் பொங்கல் விழா இம்முறை பத்து பேருடன் மாத்திரம்

முல்லைத்தீவு - செம்மலை கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நாளை இடம்பெறவுள்ளது. இந்நிலையில் தற்போதைய கொரோனா அசாதாரண நிலையினைக்கருத்திற்கொண்டு குறித்த பொங்கல் விழாவில், சுகாதாரவழிமுறைகளைப் பின்பற்றி பத்துப் பேர் மாத்திரம் கலந்துகொள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலகம் அனுமதியளித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நாட்டில் நிலவுகின்ற கொரோனா வைரஸ் தாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பத்துப்பேரினை மட்டும் உள்ளடக்கியதாக ஆலய கிரியைகளை எளிமையான முறையில் சமூக சுகாதார இடைவெளிகளைப் பின்பற்றி 12.07.2021 ஆம் திகதி மாலை தொடக்கம் 13.07.2021 ஆம் திகதி மாலை வரை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-4)

# சீரற்ற காலநிலையால் மீண்டும் மின் விநியோகம் தடை

(கொழும்பு)

பலத்த காற்று காரணமாக நேற்று 60,000 இற்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்களுக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் விநியோகத்தை மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹா, களுத்துறை, மாத்தளை, கேகாலை, பதுளை, காலி ஆகிய மாவட்டங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நாட்டின் பல பகுதிகளை ஊடறுத்து வீசிய பலத்த காற்றினால், நேற்று முன்தினம்485,000 இற்கும் மேற்பட்டோருக்கான மின் விநியோகம் தடைப்பட்டது. (7-5)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி கிராமத் தில் வீட்டுக்கு வீடு கப்ருக தென்னங் கன்றுகள் 40 இலட்சம் நடும் தேசிய வேலைத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் ஆரம்பித்து வைத்தார். இவ் வேலைத் திட்டமானது பல்வேறு பகுதியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்:- தவசீலன்)






கண்டாவளை பிரதேச இளைஞர் சேவைகள் மன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஏற்பாட்டில் நேற்றைய தினம் தருமபுரம் வைத்தியசாலையில் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. இதில் 60 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து இரத்ததானம் வழங்கி வைத்தனர். இரத்தக் கொடையாளிகளுக்கு நினைவுச் சான்றிதழ் மற்றும் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:- தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கோவெக்சின் தடுப்பூசி விவகாரத்தில் இன்னும் ஆறு வாரங்களில் முடிவு

### உலக சுகாதார அமைப்பு




(ஜெனீவா)

பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்து வரும் கோவெக்சின் தடுப்பூசிக்கு இதுவரை உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.

கோவெக்சின் தடுப்பூசி விவகாரத்தில் இன்னும் 4 முதல் 6 வாரங்களில் முடிவு எடுக்க வாய்ப்புள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ள கோவெக்சின் தடுப்பூசிக்கு இந்தியா வில் அவசர கால பயன் பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

எனினும் இந்தத் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டிற்கு பயன்படுத்த உலக சுகாதார அமைப்பு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையம் ஏற்பாடு செய்திருந்த இணைய கருத்தரங்கு ஒன்றில் உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது, அடுத்த 4-6 வாரங் களில் கோவெக்சின் தடுப்பூசிக்கு அவசரகால பயன்பாட்டுக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து முடிவு எடுக்கப்பட வாய்ப்பு உள்ளது.

பாரத் பயோடெக் நிறு வனத்தின் மொத்த தரவுகளும் உலக சுகாதார அமைப்புக்கு கிடைத்து வருகிறது. நிபுணர் குழுவால் இது ஆய்வு செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார். (8-7)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-4 048 003**

**தொற்று :-187 526 215**

**(நேற்று மாலை நிலவரம்)**

## இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினரால் 30 பங்களாதேஷ் பெண்கள் கைது

(டில்லி)

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் வரை சட்டவிரோதமாக சர்வதேச எல்லையை கடந்து நாட்டுக்குள் நுழைந்த 30 பெண்களை கைது செய்துள்ளனர்.

அதேநேரம் இந்த பெண்களை நாட்டிற்குள் சட்டவிரோதமாக கடத்திய குற்றச்சாட்டுக்காக 6 இந்தியப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலான பெண்கள் கடத்தல்காரர்களால் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருவதாக கூறிய போலிக் காரணங்களினால் ஈர்க்கப்பட்டவர்கள் என்றும் எல்லைப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்த குற்றச்சாட்டுக்காக எல்லைப் பாதுகாப்புப் படையினர் 2020 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 60 பங்களாதேஷ் பிரஜைகளை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் கணிசமானவர்கள் பெண்கள். அவர்களில் பெரும்பாலானோர் தொழில்வாய்ப்புகள் அல்லது திருமணம் போன்ற காரணமாக எல்லையை கடந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

## குறைதீர் அதிகாரியை நியமித்தது டுவிட்டர்

(டில்லி)

இந்திய மத்திய அரசின் புதிய விதிகளைப் பின்பற்றும் வகையில் வினய் பிரகாஷ் என்பவரை உள்நாட்டு குறைதீர் அதிகாரியாக டுவிட்டர் நேற்று நியமித்தது.




டுவிட்டர், பேஸ்புக், வட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் போன்ற நிறுவனங்கள் தங்களது பயனாளர்களின் புகார்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக தலைமை நடவடிக்கை அதிகாரி, சிறப்பு பணி தொடர்பு நபர், உள்நாட்டு குறைதீர் அதிகாரி ஆகியோரை நியமிக்க வேண்டும் என்பது உட்பட பல புதிய விதிகளை மத்திய அரசு கடந்த பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வெளியிட்டது.

இந்நிலையில், உள்நாட்டு குறைதீர் அதிகாரியாக வினய் பிரகாஷை டுவிட்டர் நியமித்துள்ளது. (8-7)

## சினோபார்ம் மற்றும் அஸ்ட்ரா 90 சதவீதம் திறனுடையது

### ஆய்வில் தகவல்

(ஜெனீவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸின் புதிய வேறு திரிபுகள் பரவியுள்ள நிலையில் குறிப்பிட்ட இரண்டு தடுப்பூசிகளை கலந்து போடுவதால் கொரோனா பாதிப்பிலிருந்து மீளலாம் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. தடுப்பூசி குறித்து தாய்லாந்து விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் சினோபார்ம் தடுப்பூசி ஒரு டோஸும், அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியில் ஒரு டோஸும் கலந்து போட்டுக் கொண்டால் அது டெல்டா மற்றும் அல்பா வைரஸுக்கு எதிராக 90 சதவீதம் திறனுடன் செயலாற்றுவதாக தெரிவித்துள்ளனர். (8-7)

## ஆப்கான

## 85 சத

### உலக

(காபூல்)
ஆப்கானிஸ்தா
கட்டுப்பாட்டில் இ
தெரிவித்துள்ளனர்
மருந்துகள் மற்று
பிரச்சினைகள் குறித்
சர்வதேச நாடுகள்

## வெனிசுவெ

❖26 பேர் பலி

❖38 பேர் காயம்

(கராகஸ்)

வெனிசுவெலாவில் வடமேற்கு பகுதியில் பொலிஸாருக்கும் ஒரு கும்பலுக்கும் இடையிலான மோதல்களில் நான்கு அதிகாரிகள் உட்பட குறைந்தது 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 38 பேர் காயமடைந்துள்ளனர் என வெனிசுவெலா உள்துறை அமைச்சர் கார்மென் மெலண்டெஸ் தெரிவித்தார்.

## தமிழகத்தி ஒரு வாரத்திற்



(டில்லி)

தமிழகத்தில் மேலும் ஒரு வாரத்திற்கு தளர்வுகளுடனான ஊரடங்கு சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார். கொவிட்-19 பரவலை தடுக்கும் வகையில் இந்த நடவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# னிஸ்தானில் ஓங்கும் தலிபான்களின் கை

# வீத நிலப்பரப்பு அவர்கள் வசம்

## க நாடுகள் கவலை

**தானில் 85வீத நிலப்பரப்பு தங்கள் இருப்பதாக தலிபான் அதிகாரிகள் னர். இதனால் ஆப்கானிஸ்தானிற்கான றும் பொருட்களைப் பெறுவதில் உள்ள றித்தும், மனித உரிமை மீறல்கள் குறித்தும் ர் கவலை அடைந்துள்ளன.**

தலிபான்களின் தலைவனான பின்லேடனை சுட்டுக் கொன்ற அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுப் படைகள் ஏறக்குறைய 20 ஆண்டு கால தலிபான்களுடன் சண்டை போட்டு ஒரு கட்டத்தில் ஓய்ந்து விலகிவிட்டனர்.

உள்ளூர் ஆப்கானிய அதிகாரிகளோ, ஹெராத் மாகாணத்தில் உள்ள ஒரு முக்கியமான மாவட்டத்தை தலிபான்கள் கைப்பற்றிவிட்டதாக கூறுகிறார்கள். துர்க்மெனிஸ்தானின் எல்லையில் உள்ள வடக்கு நகரமான டோர்குண்ட் நகரத்தை ஒரே இரவில் தலிபான்களால் கைப்பற்றப்பட்டதாக ஆப்கான் அரசு படை அதிகாரிகளும், தலிபான்களும் தெரிவிக்கிறார்கள்.

சண்டையில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான ஆப்கானிய பாதுகாப்பு படையினர் மற்றும் அகதிகள் எல்லையைத் தாண்டி அண்டை நாடான ஈரான் மற்றும் தஜிகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் இந்த முன்னேற்றத்தை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ள ரஷ்யா உட்பட பல்வேறு மேற்கு நாடுகள், ஆப்கானிஸ்தானில் இனி தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்று கவலை அடைந்துள்ளன. (8-7)

# வலாவில் தாக்குதல்



மேலும் குறித்த கும்பலிடம் இருந்து 24 ஆயிரம் வெடிமருந்துகள் உட்பட ஆயுதங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (8-7)

# தடுப்பூசி செலுத்தாவிட்டால் கட்டாயப் பணி நீக்கம்

## பிஜி அரசின் அதிரடியான தகவல்

(சுவா)

தென் பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவான பிஜியில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாவிட்டால் பணி நீக்கம் என அந்நாட்டு அரசாங்கம் அதிரடியாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் முதலாவது கொவிட் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாத அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்படுவார்கள் என்றும் நவம்பர் முதலாம் திகதிக்குள் இரண்டாவது கொவிட் தடுப்பூசியை செலுத்தப்படாவிட்டால், பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் அந்நாட்டு பிரதமர் பிராங்க் பைனிமராமா தெரிவித்தார்.

ஒரு சில நாடுகள் இது போன்ற கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் மக்களை தடுப்பூசி செலுத்திக்கொள்ள வலியுறுத்தி வருகின்றமை



குறிப்பிடத்தக்கது. (8-7)

# தில் மேலும் ற்கு ஊரடங்கு





க்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமுல்படுத் தப்பட்டிருந்த தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு சட்டம் இன்றுடன் நிறைவடையவிருந்தது. இந்நிலையில் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (8-7)

# வெப்ப அலை அதிகரிப்பால் அமெரிக்க மக்கள் திண்டாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவை தாக்கிய வரலாறு காணாத வெப்ப அலையானது 200 பேரின் உயிரைப் பறித்துள்ளது.

சமீப நாட்களாக அமெரிக்காவின் பசுபிக் வடமேற்கு பகுதிகளில் கடுமையான வெப்ப அலை தாக்கி வருகிறது.

இதனால் அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தில் 116 பேரும், வோஷிங்டனில் 78 பேரும் உயிரிழந்துள்ளனர்.



நாடு முழுவதும் பல பகுதிகளில் வெப்பநிலை 46 பாகை செல்சியஸாக பதிவாகியுள்ளது. இதனால் மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

கனடாவின் பசுபிக் கடற்கரையில் 100 கோடிக்கும் அதிகமான கடல் விலங்குகள் வெப்ப அலைகளால் இறந்திருக்கலாம் என பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரியலாளர் கிறிஸ்டோபர் ஹார்லி கூறியுள்ளார்.

தட்பவெப்பநிலை மாறிக் கொண்டே இருக்கிறது. அதன் காரணமாகவே பல வியத்தகு வானிலை நிகழ்வுகள், பெரிய வெள்ளம், காட்டுத் தீ போன்ற பல இயற்கை பேரிடர்கள் ஏற்படுகின்றன என அமெரிக்க வானி[illegible] ஆய்வாளர்கள் தெரிவி[illegible]ள்ளனர். (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்களை செலுத்துவதில் சிக்கல் இல்லை

## அஜித் நிவாட் கப்ரால்



(கொழும்பு)

வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதில் எவ்வித மான சிக்கல்களும் இல்லை என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அடுத்துவரும் காலப்பகுதி யில் ஒரு பில்லியன் வரை யிலான வெளிநாட்டுக் கடன் கள் செலுத்தப்படவுள்ளதாகவும் அரசாங்கம் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியிருப்பதால் அக்கடன் களைச் செலுத்த முடியாத இக் கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு ள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ பதவியைப் பொறுப்பேற்று ஆட்சி அமைத்தவுடன் அரசாங் கத்தினால் நிலுவையில் உள்ள கடன் தொகையில் 2020 ஆம் ஆண்டுக்கான தொகையை மீளச் செலுத்த முடியாது என்று பிரசாரம் செய் தன. ஆனால் அவ்விதமான எந்த நிகழ்வுகளும் நடைபெற் றிருக்கவில்லை.

அரசாங்கம் உரிய காலப் பகுதியில் அக்கடன் தொகை களைச் செலுத்தியிருந்தன. தற்போது, நாணயத்தாள்களை அச்சிட்டதன் காரணத்தினால் இந்த ஆண்டின் அடுத்துவரும் காலப்பகுதியில் உள்ள கடன் தொகைகளை செலுத்த முடி யாது என்று பிரசாரம் செய்கி ன்றன. ஆனால் அவ்விதமான நெருக்கடியான நிலைமைகள் எவையும் காணப்படவில்லை. கொரோனா வைரஸ் பரவல் காலத்திலும் நிதி முகாமைத்து வம் முறையாகவே பேணப் பட்டது. அதேபோன்று, தற் போதும் அந்தச் செயற்பாடுகள் அனைத்தும் முறையாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின் றன.

ஆகவே, அரசாங்கம் உரிய காலப்பகுதியில் கடன் தொகை களை முறையாகச் செலுத்தும். அப்போது எதிர்க்கட்சிகள் எவ் விதமான காரணங்களைக் கூறி பிரசாரம் செய்யப்போகின்றன என அவர் வினவினார். (நி-5)

# ‘வீட்டுக்கு வீடு தென்னைமரம்’ நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி தலைமையில் அங்குரார்ப்பணம்



(கொழும்பு)

40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடும் “வீட்டுக்கு வீடு தென்னை மரம்” என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான தங்கொட்டுவ - புஜ்ஜம்பொல, வெலிகெட்டிய தோட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட் டது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள் ளது. தற்போது வருடாந்தம் சுமார் 2,800 மில்லியன்களாக உள்ள தேங் காய் அறுவடையை, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 3,600 மில்லி யன்களாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படு கின்றது.

நீண்டகாலமாக இலங்கையின் பெயரை சர்வதேச சந்தையில் உயர்ந்த நிலையில் வைத்திருப்பதற்கு தேயிலை, தென்னை, இறப்பர் ஆகிய ஏற்றுமதிப் பயிர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எதிர்காலத்திலும் இந்த நிலைமையைப் பேணுவதற்கு, தென்னம் செய்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய உற் பத்திகளை ஊக்குவிப்பதற்கு “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு மில்லி யன் தென்னங்கன்றுகளை சமுர்த்திப் பயனாளிகளுக்கும் இரண்டு மில்லியன் தென்னங்கன்றுகளை நிவாரண அடிப் படையிலும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள் ளது.

மேலும் ஒரு மில்லியன் தென்னங் கன்றுகளை விரும்பியவர்கள் கொள் வனவு செய்து நடுவதற்கும் ஏற்ற வகை யில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கும் வகையில், வெலிக்கெட்டிய தோட்டத்தில் ஜனாதி பதியினால் தென்னங்கன்று ஒன்று நடப்பட்டது. (நி-5)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2351


### தாருகேஷ்

இன்னைக்கு பைக்ல போகும் போது ஒரு பொண்ணு
லிப்ட் கேட்டுச்சு கொடுத்தேன்.
கொஞ்சத் தூரம் போனதும்
இப்படியே வாழ்க்கை முழுசும்
உங்க கூட வரனும்னு
சொல்லிச்சு பெற்றோலுக்கு
காசு உன் அப்பனா
குடுப்பான்னு சொல்லி
இறக்கி விட்டுட்டேன்...யார்க்கிட்ட....



### குறிஞ்சிநிலா

நாட்டில காஸ், டீசல்,பெற்றோல், சின்ன
வெங்காயம், கறிவேப்பிலை விலையெலாம் ஏறுது
ஆனா சம்பளம் மட்டும் அப்படியே இருக்கே...



### நிவேதா

கொரோனா கட்டுக்குள்ள
இருக்கு, கட்டுக்குள்ள
இருக்குன்னு
சொன்னீங்களேடா.
அது கோயம்பேடு
மார்க்கெட்
கீரைக்கட்டுக்குள்ளயும்,
கொத்தமல்லி
கட்டுக்குள்ளயும்
இருக்குன்னு எவனாவது
சொன்னீங்களாடா?



### வாசுதேவ்

அட்வைஸ் என்பது வேப்பிலை மாதிரி...
பிய்த்துக் கொடுக்கிறது ஈசி,
மென்னு முழுங்குறது கஷ்டம்



### நித்தீஷ்

கவலைப்படாத...உனக்கு சீக்கிரமா
கல்யாணம் பண்ணி வைக்கிறோம்...




நானே, காலைல காப்பில பிஸ்கட் விழுந்திருச்சுன்னு
கவலையா இருக்கேன்... இவங்க வேற

### அகல்யா

பெண்- ஹலோ இது கஸ்டமர் கெயார் தானே?
கஸ்டமர் கெயார்- ஆமாம் சொல்லுங்க மேடம்
பெண்- என் அஞ்சு வயது பையன்
சிம் கார்டை
விழுங்கிட்டான்.
கஸ்டமர் கெயார்- அப்படீனா டாக்டர்
கிட்ட கூட்டிக்கிட்டு போங்க மடம்.
பெண்- இல்லை அதிலே 95 பைசா
பலன்ஸ் இருந்துச்சு. அவன் பேசும்
போது காசு போகுமா சேர்?
கஸ்டமர் கெயார்-???



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம்
# அடுத்த வாரம் விரிவுபடுத்தப்படும்



(கொழும்பு)

நாட்டில் அடுத்த வாரத்தில் கொவிட்-19 வைரஸிற்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன தெரிவித்தார்.

எதிர்பார்த்தபடி சீன தயாரிப்பான 20 இலட்சம் சினோபார்ம் கொவிட் தடுப்பூசிகளுக்கான மருந்து நேற்றுக் காலை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதேபோன்று மேலும் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் மற்றுமொரு தொகை தடுப்பூசிகளுக்கான மருந்து இந்த மாதத்தின் 3 ஆவது வாரத்தில் நாட்டிற்குக் கிடைக்க விருப்பதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதத்தை அண்மிக்கும் போது நாட்டில் 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி ஏற்றும் பணியை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரான விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன மேலும் கூறினார். (நி-5)

## நீச்சல் பழகியபோது துயரம்
## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நீச்சல் பழகியபோது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்த துயரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொஸ்கொட, துவே மோதர கங்கையில் நீச்சல் பழகிய நிலையிலேயே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தாத்தா மற்றும் அவரின் பேரன்களான 6 வயதுடைய இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படை சுழியோடிகளால் மூவரது சடலங்களும் மீட்கப்பட்டன. (நி-5)

# மேலும் ஒரு தொகுதி சினோபார்ம்




(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் ஒரு தொகுதி சினோபார்ம் தடுப்பூசி டோஸ்கள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை, கொண்டுவரப்பட்டுள்ளன.

சீனாவினால் தயாரிக்கப்பட்ட 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசி டோஸ்கள், இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான இரு விமானங்கள் ஊடாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான தடுப்பூசி அளவுகள் ஒரே நாளில் கொண்டு வரப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். (நி-5)

# பல மாவட்டங்களுக்கான மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக 7 மாவட்டங்களைச் சேர்ந்த பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால்விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை களனி, களு, ஜின் மற்றும் நில்வள கங்கைகள் ஆகியவற்றை அண்மித்து மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் திடீர் வெள்ளம் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று முன்தினம் மாலை வரை 7 மாவட்டங்களில் 2,894 குடும்பங்களைச் சேர்ந்த 1,1737 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நேர்மையின் வெற்றி!

வாழ்க்கையிலே வெற்றி பெற என்ன வழி?

இது ஒரு முக்கியமான கேள்வி.

இதற்கு எல்லோரும் பொதுவாக சொல்கின்ற பதில் உழைத்தால் வெற்றி பெறலாம் என்பது தான். வாழ்க்கையில் வெற்றி பெற உழைப்பு மட்டும் இருந்தால் போதாது. நேர்மையும் வேண்டும் என்கின்றார் பால் ஹாப்மேன்.

இவர் யார் தெரியுமா?

இவர் ஒரு பெரிய பொருளாதார நிபுணர். இரண்டாம் உலகப் போர் முடிந்த சமயம்... அப்பொழுது இவர் அமெரிக்காவின் நிதி ஆலோசகரா இருந்தார்.

தன் வாழ்க்கையில் நடந்த பழைய நிகழ்ச்சி ஒன்றைச் சொன்னார்.

சின்ன வயதிலே அவர் படிப்பு முடிந்தவுடன் வேலை தேடிக் கொண்டிருந்தார். ஒரு கால்நடை வைத்தியரிடம் போய் வேலை கேட்டார்.

இவர் அங்கே போன சமயத்தில் அந்த டாக்டர் தன்னுடைய பழைய கார் ஒன்றை விற்பதற்காக வேறு ஒருத்தரிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தார்.

வாங்க வந்தவர் இவரிடம் அந்தக் காரைப் பற்றி விபரமெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். கார் நல்ல நிலைமையில் இருக்குமா? என்கின்ற சந்தேகம் அவருக்கு. எல்ல விபரமும் கேட்டுவிட்டு கடைசியாகச் சொன்னார் டாக்டர் இந்தக் காரை நீங்களே என் ஊருக்கு ஓட்டிக் கொண்டு வர வேண்டியது... கார் எந்தப் பழுதும் ஆகாமல் என்னுடைய ஊருக்கு வந்து சேர்ந்துவிட்டது என்றால் அங்கேயே நான் பணம் கொடுத்து காரை வாங்கிக் கொள்கின்றேன் என்றார்.

எங்கள் கார் அவ்வளவு தூரம் பழுது இல்லாமல் போய்ச் சேருமா? என்கின்ற சந்தேகம் டாக்டருக்கு. அவர் என்ன செய்தார். தன்னிடம் வேலை கேட்டு வந்திருந்த பால் ஹாப்மேனை அழைத்து அவரிடம் சொன்னார்...

இதோ பார்.. நீ இந்தக் காரை அவருடைய ஊர் வரைக்கும் நல்லபடியாக ஓட்டிக் கொண்டு போய் சேர்த்து விட்டாய் என்றால் உனக்கு நான் வேலை கொடுத்து விடுகின்றேன்.

அது மட்டுமில்லை... கார் விற்ற தொகையிலே கமிஷனும் தருகின்றேன் சம்மதமா? என்று கேட்டார்.

ஹாப்மேன் யோசனை செய்தார். சரி என்று சொல்லி சம்மதித்து விட்டார். உடனே அவரும் கார் வாங்க வந்தவரும் புறப்பட்டார்கள். இவர் மிகவும் சிரமப்பட்டு வழியிலே எங்கேயும் நிறுத்தாமல் காரை ஓட்டிக் கொண்டு போய் சேர்த்துவிட்டார். அவர் இவரை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு உள்ளே போனார். பின்பு கேட்டார்...

இப்ப சொல்லு... இந்தக் கார் நிலைமை எப்படி இருக்கு...? நல்ல நிலைமையிலே இருக்கா... உன் மனசாட்சிப்படி பதில் சொல்லு என்றார்.

இவர் உடனே கார் நல்ல நிலைமையில் இருக்கு என்று சொல்வதற்காகத் தான் வாயைத்திறந்தார். அதற்குள்ளே எதிரிலே சுவரிலே பார்த்தார்.

அங்கே இயேசு நாதர் படம் மாட்டியிருந்தது அதிலே எழுதியிருந்தது...நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் இயேசு கவனித்துக் கொண்டிருக்கின்றார் என்று. அதைப் பார்த்தார்.உடனே கார் சரியில்லை என்கின்ற உண்மையைச் சொல்லிவிட்டார்.

இவர் இப்படி சொன்னதும் அவர் இவரை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார். இவருடைய நேர்மை இவரைச் சிந்திக்க வைத்தது. உன்னுடைய நேர்மையைப் பாராட்டுகின்றேன். உனக்கு கமிஷன் கிடைக்க வேண்டும் என்கின்றதற்காக நான் இந்தக் காரை வாங்கிக் கொள்கின்றேன் என்றார். இப்பொழுது இவர் திகைத்துப் போய் நின்றார்.

மறுபடியும் அவர் சொன்னார். நீ காரை ஓட்டிக் கொண்டு வரும் பொழுதே உன்னுடைய திறமையைப் பார்த்தேன். உனக்கு விருப்பம் இருந்தால் நீ என்னிடம் வேலைக்குச் சேரலாம் என்றார். பால்ஹாப்மேன் அவரிடம் வேலைக்குச் சேர்ந்தாராம். படிப்படியாக முன்னேறினாராம்.

அமெரிக்க நிதி ஆலோசகர் என்கின்ற அளவுக்கு வந்த பிறகும் இந்தப் பழைய சம்பவத்தை அவர் மறக்கவில்லை. அடிக்கடி சொல்வது உண்டு.

இதிலேயிருந்து என்ன தெரியுது.வாழ்வில் முன்னுக்கு வர வேண்டும் என்றால் உழைப்பு மட்டும் போதாது. நேர்மையும் வேண்டும் என்பது புரிகிறது. இப்பொழுதெல்லாம் சில பேருடைய நேர்மை நமக்கு மிகவும் ஆச்சரியமாகக் கூட இருக்கு. ஒரு புத்தகக் கடை. அங்கே ஒருத்தர் நிறைய நேரமாக தேடி ஒரு புத்தகத்தை எடுத்தார்.அதற்கு பில் போடச் சொன்னார்.

பில் போடுபவர் சேர் இந்தப் புத்தகம் மகா அறுவை... மகா மட்டம்... இது வேண்டாம். உங்களுக்கு வேறு ஏதாவது ஒன்று பாருங்க என்றார்.

வாங்க வந்தவர் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்.

உங்கள் நேர்மையைப் பாராட்டுகின்றேன். அதுசரி... இந்தப் புத்தகத்தை ஏற்கனவே நீங்கள் படித்துப் பார்த்துவிட்டீர்களா? என்று கேட்டார்.

அதைப் படித்து வேறு பார்க்க வேண்டுமா? என்றார் அவர். பின்பு எப்படி இது மகாமட்டம், மகா அறுவை என்று சொல்கின்றீர்கள்? என்றார் இவர்.

அதை எழுதினவனே நான் தான் சேர் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

**24**

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



(See National Land Commission Bill published in the Government Gazette on 23rd March 1992.) மத்திய அரசிற்கு விசுவாசத்தைக் கொண்ட ஒரு பெரிய எண்ணிக்கையை முன்மொழிவதன் மூலம் மேலெழுதும் அதிகாரம் அரசாங்கத்தின் கைகளில் வைக்கப்பட்டது. இதனால் தேசிய காணி ஆணைக் குழுவின் தேசிய காணிக் கொள்கை வெளிப்படையாக மத்திய அரசு சார்ந்ததாக இருந்திருக்கும்.

(c) சுதந்திரத்திற்குப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களால் காணிப் பிரச்சினைகள் குறித்து பயன்படுத்தப்பட்ட ஏகபோக அதிகாரத்தை காணி அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டால் தக்கவைத்துக் கொள்ள முடியாது என்ற எண்ணம், ஏனெனில் காணிகளை கையுதிர்த்தல் (disposition) மற்றும் காணிகளைப் பராதீனப்படுத்தல் (alienation) போன்றவற்றிற்கு விடுவிக்கப்பட்ட காணிகள் அரசியலமைப்பின்படி மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படும். இது மையத்தின் ஒரு சுயநலப் பொறாமை, இது காணி அதிகாரங்களை பகிர்ந்தளிக்க மத்திய அரசைத்தடுக்கிறது. ஆனால், தவறுகளை எதிர்கொள்ள தேவைப்படும் பட்சத்தில், தேசிய காணி ஆணைக்குழு ஒப்புதல் அளித்த தேசிய கொள்கை மதிப்புரைகளுக்கு மீளாய்வு நடவடிக்கைகள் எடுக்க முடியும். எனவே அவ்வாறு எண்ணத் தேவையில்லை.

(d) மேலும் அரசாங்கமும் மாகாண சபைகளும் வெவ்வேறு அரசியல் கட்டுப்பாட்டு கைகளில் இருந்தால், மாகாண சபைகள் காணிகளை கையுதிர்த்தல் (disposition) மற்றும் காணிகளைப் பராதீனப்படுத்தல் (alienation) செய்யும் போது எதிர்க்கும் அரசியல் குழுக்களுடன் மோதல்களுக்கு வருவதற்கான வாய்ப்புகளை இது வழங்கக் கூடும். தற்போதைய மாகாண சபை மட்டத்தில் உள்ள உரையாடல்களை ஒரு குறிகாட்டியாக பார்க்கும் போது குறிப்பாக மத்திய அரசுக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கும் இடையில் இதுபோன்ற மோதல்கள் ஏற்படும் என்பது உறுதி. அரசியல் அதிகாரங்கள் (மத்தி மற்றும் மாகாண) ஒரே அரசியல் குழுவில் இருக்கும் போதும் தென் மாகாண சபையில் இது நிகழ்வதை காணக்கூடியதாகவுள்ளது. மேலும், தேர்தலுக்குப் பிறகு சில முறை சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட காணி பெறுநர்கள் (allottees) அரசியல் காரணங்களால் காணிகளிலிருந்து விரட்டப்படுகிறார்கள். எவ்வாறாயினும், இது போன்ற நிகழ்வுகளைத் தடுக்கக் கூடிய தேசிய பிணைப்புடன் தேர்வு அளவுகோல்களை தேசிய காணி ஆணைக்குழு கண்டிப்பாக உருவாக்க வேண்டும். மேலும், பின்னிணைப்பு II இல் உள்ள பிரிவு 3:2 இல் உள்ள தொழில்நுட்ப செயலகம் (**Technical Secretariat**) மாகாணசபைகள் / மத்திய அரசாங்கத்திற்கு இடையிலான கருத்து மோதல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

16) தேசிய காணி ஆணைக் குழுவை நிறுவ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதா ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் வரையறுத்து இருந்தது. அதில் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக தேசியக் கொள்கையைத் தயாரிப்பது மற்றும் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான விதிமுறைகளை வகுத்தல் ஆகியவையும் அடங்கும். அத்தோடு வரைவு மசோதாவின் பிரிவு 14 இன் கீழ் தொழில்நுட்ப செயலகம் (**Technical Secretariat**) கவனிக்க வேண்டிய நலன்களான மண், காலநிலை, மழை, மண் அரிப்பு, வனப்பகுதி, சுற்றுச் சூழல் காரணிகள் மற்றும் பொருளாதார நம்பகத் தன்மை போன்றவற்றுக் கான விதிமுறைகளும் உள்ளடங்கும்.

**தேசிய காணி ஆணைக் குழுவை நிறுவ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதா ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் வரையறுத்து இருந்தது. அதில் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக தேசியக் கொள்கையைத் தயாரிப்பது மற்றும் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான விதிமுறைகளை வகுத்தல் ஆகியவையும் அடங்கும். ஆயினும் இந்த மசோதா அன்றைய நாளில் நிறைவேற்றப்படவில்லை. 1994 ஜூன் 24 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அது தோல்வியடைந்தது.**

ஆயினும் இந்த மசோதா அன்றைய நாளில் நிறைவேற்றப்படவில்லை. 1994 ஜூன் 24 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அது தோல்வியடைந்தது. 1989 ஆம் ஆண்டில் காணி அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் தீவிர அக்கறை காட்டிய அப்போதைய ஐக்கிய தேசிய அரசாங்கம் இந்த ஐந்து ஆண்டுகளில் இதனைச் செயற்படுத்த எவ்வாறு பின்தங்கியிருந்தது என்பதை இது காட்டுகிறது. இதன்பின் மற்றொரு முக்கியமான அரசியல் சூழ்நிலை உருவாகியது. அதாவது ஜனாதிபதி நிர்வாகத்தின் (புதிய ஜனாதிபதி தெரிவு) மாற்றம் மற்றும் காணி விடயத்தில் அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றம் போன்றவையாகும்.

17) மாகாண காணி ஆணையாளர்களின் நிர்வாகக்கட்டுப்பாடு அரசாங்கத்தின் உத்தரவு மூலம் பல வழிகளில் செயற்பட்டது. முதலாவதாக, காணி ஆணையாளர்கள் திணைக்களத்திலிருந்து உதவி அல்லது பிரதி காணி ஆணையாளர்களை அனைத்து மாகாண சபைகளுக்கும் மாகாண காணி ஆணையாளர்களாக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இரண்டாவதாக, ஒரே நேரத்தில் மாகாண காணி ஆணையாளர்கள் மேலதிக காணி ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டனர். மூன்றாவதாக, காணி ஆணையாளர், மாகாண காணி ஆணையாளர்களுக்கான கூட்டங்களை வைக்கத் தொடங்கினார், அங்கு காணி அதிகாரப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

நான்காவதாக, அதிகாரப் பரிமாற்றச்சட்டத்தின் (Transfer of Powers Act) மூலம் பிரதேச செயலாளர்கள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு மத்திய அரசின் பிரதேச தலைவர்களாகவும் உருவாக்கப்பட்டார்கள். மேலும் அரச காணி விடயங்களும் அவர்கள் கைகளில் விடப்பட்டன. இந்த ஏற்பாடுகள் மாகாண காணி நிர்வாகிகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரச் செய்தன. அதாவது இச் செயற்பாடு காணி அதிகாரங்களை மாகாண அரசிடமிருந்து நீக்கிவிட்டன.

18). இரண்டு மாகாண சபைகள், அதாவது வடமத்திய மற்றும் மேற்கு மாகாண சபைகள் தமது மாகாணத்துக்கான காணி சம்பந்தமான நியதிச் சட்டங்களை நிறைவேற்றியிருந்தன. இருப்பினும், இந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை மத்திய அரசாங்கம் விரும்பவில்லை. காணி ஆணையாளர் நாயகம் சட்டமா அதிபரின் உதவியுடன் இந்நியதிச்சட்டங்கள் செயற்படுத்துவதை தடுத்து நிறுத்த அல்லது அளித்த பரிந்துரைகளில் தலையிட நடவடிக்கை எடுத்தார்.

இந்த நியதிச் சட்டங்களில் உள்ள சில விதிகள் அரசியலமைப்பு விதிகளுடன் முரண்படுகின்றன. அல்லது அரசியலமைப்பு விதிகளை ஊடுருவுகின்றன என அரசாங்கத்தால் காரணம் கூறப்பட்டது.

நியதிச் சட்டங்கள் அரசியலமைப்பு விதிகளுடன் முரண்படுகின்றதை நிரூபிக்க சிலவற்றை மேற்கோள்காட்டலாம். உதாரணமாக வட மத்திய மாகாணத்தால் நிறைவேற்றப்பட்ட 1994 ஆம் ஆண்டின் காணி நியதிச்சட்டம் 5 இல் உள்ள பிரிவு 3, சட்டத்தை அமுல்படுத்துவது அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்குள் செல்வதாக உள்ளது கருதப்படுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தல் உத்தரவை மீறிய 214 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணிமுதல் நிறை வடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 214 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 49 ஆயிரத்து 259 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்த்தன புதிய வழிகாட்டல் கோவையை வெளியிட்டுள்ளார்.

இதில் தளர்வுகள் அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போது நடைமுறையிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடு மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளன.


கொவிட்-19 வைரஸ் தொற்றுப் பரவலின் நிலைமையை பொறுத்து சுகாதார வழிகாட்டல்களில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன அனைத்து அரச, தனியார் நிறுவனங்களும் உரிய முறையில் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## தீர்க்க சுமங்கலி வரம் அருளும் காரடையாள் நோன்பு



கணவரின் ஆயுள் முடிவதற்கு 4 நாட்களுக்கு முன்னதாக சாவித்திரி ஒரு விரதத்தை தொடங்கினாள். இரவும், பகலும் கண் விழித்து, அன்ன ஆகாரமின்றி கடும் விரதம் இருந்தாள். அன்று சத்தியவான் பெற்றோருக்கு பழம் பறித்து வருவதற்காக காட்டிற்கு செல்ல புறப்பட்டான்.

அவனுடன் தானும் வருவதாக கூறி சாவித்திரியும் உடன் சென்றாள். சத்தியவானின் ஆயுள் முடியும் நேரம் வந்தது. திடீரென அவன் தலை வலிக்கிறது என்று கூறி கீழே விழுந்தான். அவனை சாவித்திரி தாங்கி பிடித்து, தனது மடியில் சாய்த்துக் கொண்டாள்.

அப்போது அங்கே பாசக்கயிற்றுடன் எமன் தோன்றினான். 'நீங்கள் யார்?' என்று சாவித்திரி கேட்டாள்.

அதற்கு எமதர்மன், 'பெண்ணே! உன் கணவரின் ஆயுள் முடிந்து விட்டது. பதிவிரதையானதால் உனது கண்களுக்கு தெரிந்தேன். நான் எமதர்மன்' என கூறிவிட்டு, சத்தியவானின் உயிரை பறித்துக் கொண்டு புறப்பட்டான். சாவித்திரியும் எமனை பின் தொடர்ந்து சென்று, 'நண்பரே! சற்று நில்லுங்கள்' என்றாள். இதைக் கேட்டு திடுக்கிட்ட எமன், 'நான் உனது நண்பனா?' என வியப்புடன் கேட்டார்.

அதற்கு 'ஒருவன் மற்றொருவருடன் ஏழு அடிகள் நடந்து சென்றால், இருவரும் நட்புக்குரியவர்கள் ஆகிறார்கள் என பெரியவர்கள் கூறுவார்கள். அந்த வகையில் நான் உங்களை பின் தொடர்ந்து வந்தேன். நீங்கள் என் நண்பர் ஆவீர்கள்' என சாவித்திரி பதில் அளித்தாள்.

இதைக்கேட்டு எமன் புன்முறுவலுடன், 'அழகாக பேசும் உனக்கு பாராட்டுகள். உனக்கு வேண்டும் வரங்களை தருகிறேன். உன் கணவனின் உயிர் தவிர, வேறு எதையாவது கேட்டு பெற்றுக் கொள்' என்றார்.

அதற்கு சாவித்திரி 'தர்ம மகாராஜாவுக்கு மிகவும் நன்றி. என் மாமனாருக்கு பார்வை தெரிய வேண்டும். என் தந்தைக்கு ஆண் வாரிசு இல்லை. அவருக்கு நூறு குழந்தைகள் வேண்டும். மேலும் எனக்கு நூறு குழந்தைகள் வேண்டும்' என்றாள்.

'நீ கேட்ட வரத்தை தந்தேன். இனியும் என்னை பின் தொடராமல் போய் விடு' என்றார் எமன். ஆனால் சாவித்திரி மீண்டும் எமனை பின் தொடர்ந்தாள். இதனால் கோபமடைந்த எமன், 'வேறு என்ன வேண்டும்?' என கேட்க, அதற்கு சாவித்திரி 'தர்மராஜாவின் வாக்கு தப்பாது என்று நம்புகிறேன். எனக்கு 100 குழந்தைகள் பிறப்பதாக வரம் தந்தீர்கள். என் கணவன் இல்லாமல் எப்படி குழந்தை பிறக்கும்?' என்றாள். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஜூலை 21 புனித ஹஜ்ஜுப் பெருநாள்

(கொழும்பு)

இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ஹஜ்ஜுப் பெருநாளை எதிர்வரும் 21 ஆம் திகதி கொண்டாடவுள்ளனர்.

"துல்ஹிஜ்ஜா" மாதத்திற்கான தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு நேற்று முன்தினம் மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

"துல்ஹிஜ்ஜா" மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் எப்பாகத்திலும் தென்படாத காரணத்தினால் துல்-கஃதா மாதத்தை 30 ஆகப் பூர்த்தி செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. (நி-5)

## கொழும்புக்குள் நுழைய முற்பட்ட பயணிகள் பேருந்து மடக்கிப் பிடிப்பு

(கொழும்பு)

கொழும்புக்குள் நுழைய முற்பட்ட பயணிகள் பேருந்து ஒன்றின் சாரதி வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை - ஊருபொக்க பகுதியில் இருந்து வந்த பேருந்தின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறி வந்த குறித்த பேருந்தில் இரண்டு பயணிகள் மாத்திரமே இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பேருந்தின் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (நி-5)

## கைது செய்ய சிறப்புக்குழு

(கொழும்பு)

நாட்டில் பொதுமக்களை மிரட்டிப் பணம் பறிப்பவர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குழந்தை மற்றும் பெண்களுக்கு தொந்தரவு அளிப்பவர்களைக் கண்டுபிடித்து கைது செய்ய பொலிஸ் சிறப்புக் குழுவொன்றை அமைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 130 | 200 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 140 | 180 | 160 | 160 |
| கரட் | 180 | 170 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 280 | 200 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 180 | 140 |
| பயற்றங்காய் | 150 | 120 | 180 | 120 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 160 |
| பீற்றூட் | 150 | 160 | 120 | 150 |
| கறிமிளகாய் | 280 | 200 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 320 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 120 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50 | 50-80 |
| இராசவள்ளி | 250 | -- | 250 | -- |
| வெங்காயப்பூ | 260 | 240 | 250 | 320 |
| முள்ளங்கி | 80 | 150 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேவதையின் தீர்ப்பு



அது ஓர் அழகிய பனிக்காலம். ரவியும் சீதாவும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந் தனர். இருவரும் ஒரே வகுப்பு. படிப்பில் கெட்டிக்காரர்கள்.

ஆனால் அவர் களுக் குள் அடிக்கடி விவா தங்கள் வருவதுண்டு. காரணம், அவர்களில் யார் பெரியவர் என்று. அதை நிரூபிக்க, இரு வரும் போட்டி போட் டுக் கொண்டு படிப்ப தும் உண்டு.

அன்றும் அப்படித் தான் ரவியும் சீதாவும் பேசிக் கொண்டிருந்த போது, அவர்களுக்கி டையே விவாதம் முற்றியது.

ரவி சொன்னான், "நான்தான் உன்னை விட அறிவில் சிறந்த வன்" என்று. ஆனால் சீதாவோ அதை மறுத்தாள்.

"நிச்சயமா இல்லை.. நான்தான்" என்றாள் ஆணித்தரமாக. அத ற்குச் சான்றாக அவரவர் தங்கள் பிரதாபங்களை சுட்டிக் காட்டிக் கொண் டிருந்தனர். இதே ரீதி யில் பேச்சு வளர்ந்து கொண்டிருந்தது.


அப்போது திடீரென அவர்கள் முன் தோன் றியது ஓர் அழகிய தேவ தை. தேவதையைக் கண்ட இருவரும் செய் வதறியாமல் திகைத் தனர். பின் இருவரும் சுதாரித்துக் கொண்டு, "நீங்கள் யார்?" என்ற னர்.

தேவதை அவர்களி டம், ""நான் தேவலோ கத்து மங்கை. இந்த வழி யாகத்தான் தினமும் பறந்து உலா செல் வேன். இன்றும் அவ் வாறு போகும்போது உங்களது வாக்குவாதம் கேட்டது. பொறுக்க முடியாமல் இறங்கி வந்தேன்" என்றது.

பின், "உங்களுக்குள் என்ன பிரச்சினை? என் னிடம் சொல்லுங்கள்.. முடிந்தால்தீர்த்து வைக்க முயற்சிக்கிறேன்" என் றது. உடனே ரவி, "தேவதையே! இவளை விட நான்தான் அறி வில் சிறந்தவன் என் றால் ஒத்துக்கொள்ள மாட்டேங்கிறா" என் றான்.

(தொடரும்)

# மகாபாரதம்




"பாண்டவர்களும் என் மக்கள் தான். ஆயி னும் பீமன் மீது எனக் குக் கோபம் உண்டு. நெறிகெடத் துரியோ தனனை தொடையில் அடித்து வீழ்த்தினான்.

துச்சாதனனின் ரத் தத்தைக் குடித்தான். இந்த கொடுமைகளை எப்படி மன்னிப்பேன்?" என்ற காந்தாரிக்கு பீமன் பதிலளித்தான்.

"தாயே! துரியோத னன் எங்களுக்கு இழை த்த கொடுமைகளை நீங் கள் அறிவீர்கள். உச்சக் கட்டமாக பாஞ்சாலி யைத் தன் தொடை மீது வந்து அமரும்படி கூறினான்.

துச்சாதனன் அவ ளின் ஆடையைக்களைய முற் பட்டான். ஆன லும் நான் மேற்கொண்ட சப தப்படி அவன் இரத்த த்தைக் குடிக்கவில்லை.

பல்லுக்கும், உதட்டுக் கும் கீழே செல்லவில்லை இரத்தம். அதனை உமி ழ்ந்து விட்டேன். விகர் ணனைப் பொறுத்[illegible] நான் எவ்வளவோ [illegible] டுக் கொண்டும் அதனை செவிசாய்க்காமல் போரி ட்டுமாண்டான்"என்றான்.

பின் காந்தாரியின் அருகில் வந்து தருமர் வணங்கினார். கட்டி [illegible] நகங்களைக் கண்டாள்.

அவை சினத் தீயால் கருத்து விகாரம் அடை ந்தன.அது கண்டு அரு ச்சுனன் அச்சம் கொண் டான்.பின் ஒருவாறு காந்தாரி சாந்தம் அடை ந்தாள். பாண்டவர்கள் பின் பெற்ற தாயான குந்தியைக் காணச் சென்றனர்.

வியாசரின் அருளால் காந்தாரி இருந்த இட த்திலிருந்து போர்க் களத்தைக் கண்டாள். துரியோதனன் தரை மீது மாண்டு கிடப்பது கண்டு கதறி அழுதாள்.

கண்ணனைப் பார் த்து "உன்னால்தான் எல் லாம். சகோதரர்களி டையே பூசலை அவ் வப்போது தடுத்து நிறுத் தியிருந்தால் பேரழிவு ஏற்பட்டிருக்காது. என் குலம் நாசம் அடைந் தாற் போல உன் குல மும் நாசம் அடைவ தாக" என சபித்தாள். அவளுக்கு நல்லுணர்வு ஏற்படுமாறு கண்ணன் ஆறுதல் அளித்தார்.

இறந்தவர்களுக்கு இறு திச் சடங்குகள் செய்யும் நேரம் வர குந்தி கர் ணன் தன் மூத்த மகன் என்ற ரகசியத்தை வெளி ப்படுத்தினாள். பின் முறைப்படி ஈமச் சடங் குகள் நடைபெற்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.
– மெரி கிவாட்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொட்டிவிடு... என்ற ஏழைபோல இலங்கை அரசாங்கமும்...

சிவாச்சாரியர் ஒருவர் வாஸ்துமுறைகளையும் மனையடி சாஸ்திரங்களையும் மிக நுணுக்கமாக கணிப்பிட்டு உரிய அளவுப் பிரமாணத்தின் பிரகாரம் வீடொன்றை அமைத்தார்.

தான் அமைத்த புதுமனையில் கிரகப் பிரவேசம் செய்து தன் குடும்பத்துடன் அங்கு குடியிருந்தார்.

அவர் குடியிருந்த ஒவ்வொரு இராப்பொழுதிலும் வீட்டின் உச்சியில் இருந்து கொண்டு **கொட்டட்டா... கொட்டட்டா...** என்ற குரல் கேட்டுக் கொண்டே இருந்தது.

சிவாச்சாரியருக்கு பெரும் குழப்பமும் பயமும் ஏற்பட, அந்த வீட்டைக் காலி செய்து வேறு மனையில் குடியமர்ந்து கொண்டார்.

குறித்த வீட்டில் பலர் குடியிருக்க வந்தாலும் சில நாட்களில் அவர்கள் அந்த வீட்டை விட்டு வெளியேறுவது வழக்கமாயிற்று.

ஒருநாள் ஓர் ஏழை அந்த வீட்டில் குடியமர்ந்தான். ஊரெல்லாம் திரிந்து வீடு எதுவும் கிடைக்காத நிலையில், பசி பட்டினியோடு தன் மனைவி, பிள்ளைகளுடன் அந்த வீட்டில் தங்கியிருந்த அந்த ஏழையானவனிடமும் இரவுப்பொழுதில் **கொட்டட்டா.. கொட்டட்டா...** என்ற குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

இரண்டு, மூன்று இராப்பொழுதுகள் கடந்து போயின. பசி அவன் குடும்பத்தை வாட்டியது.

அந்த இரவுப்பொழுதில் வழமைபோல **கொட்டட்டா... கொட்டட்டா...** என்று குரல் கேட்க; பசியோடு இருந்த அந்த ஏழைக்குடிமகன் **கொட்டிவிடு** என்றான்.

அவ்வளவுதான் வீடு முழுவதும் பொன்னும் பொருளும் நெல்லும் தானியமும் என செல்வம் கொட்டிக் கிடந்தது.

அந்த ஏழைக் குடிமகன் மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

என்ன செய்வது வாஸ்துசாஸ்திரத்தின்படி வீடு கட்டிய சிவாச்சாரியருக்கு அந்தச் செல்வங்களை அனுபவிக்க முடியவில்லை.

ஆனால் ஏதுமற்ற அந்த ஏழை வாஸ்து சாஸ்திர அளவுப் பிரமாணத்தில் அமைத்த அந்த வீட்டின் கிடைப்பனவை அனுபவித்துக் கொண்டான்.

அது சரி இந்தக் கதை இப்போது எதற்கானதென்று நீங்கள் கேட்கலாம்.

இனி எம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற கையறுநிலையில், கொரோனாத் தடைக்கான கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

கட்டுப்பாட்டுத் தளர்வு அறிவிக்கப்பட்ட கையோடு யாழ்.பண்ணைக் கடலோரம் மக்கள் கூடி குதூகலித்தனர்.

சுருங்கக்கூறின் கொரோனாத் தொற்று இனி ஏற்படாது என்பதுபோல மக்கள் நடந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் தளர்வு நடவடிக்கை **கொட்டிவிடு** என்பதுபோல இருக்கிறது.

ஆம், கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசாங்கம் தளர்த்திவிட, எங்கும் கொரோனாத் தொற்று விஸ்வரூபமெடுக்க, இலங்கைக்கு உலக நாடுகள் பணத்தை, பொருளை வாரிவழங்கி கொடுத்த கடன்களையும் இரத்துச் செய்ய, அந்த ஏழை போல இலங்கை அரசாங்கமும் பொருளாதார கஷ்டத்தில் இருந்து மீண்டெழலாம் எனக் கருதியதோ யாரறிவார்.

# யாழில் வீட்டுத் திட்டம் தொடர்பான இறுதிப் பட்டியல் 19 இல் வெளியிடப்படும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(அராலி)

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவின் இறுதிப் பட்டியல் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடப்படும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் வீட்டுத் திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவு தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் சகல பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று 12 ஆம் திகதி திங்கட்கிழமை வரை சகல பிரதேச செயலகங்களிலும் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்படும். வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு தொடர்பில் ஆட்சேபனை உள்ளவர்கள் எழுத்து மூலம் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். முறைப்பாட்டாளர்களின் கோரிக்கைக்கு பிரதேச செயலகத்தால் எழுத்து மூலம் காரணம் தெரிவிக்கப்பட்டு மாற்றங்கள் ஏதும் நிகழுமானால் அதனை சரி செய்து 19ஆம் திகதி இறுதிப்பட்டியல் காட்சிப்படுத்தப்படும்.

பயனாளிகளுக்கு எழுத்து மூலம் தெரிவுகள் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

அதன் பின்னரும் பயனாளி தனக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட செயலகத்திற்கு விபரங்களை அனுப்பி வைத்தால் கருத்தில் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஞா-104)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 1,350 கிலோ மஞ்சள் தமிழகத்தில் மீட்பு

(மன்னார்)

தனுஷ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்கு சட்டவிரோதமாக சமையல் மஞ்சள் கடத்த இருப்பதாக மண்டபம் மெரைன் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று காலை மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரை பகுதியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

இதன்போது 1,350 கிலோ கிராம் மஞ்சள் மூடைகள் படகில் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து மஞ்சள் மூட்டைகளையும், நாட்டுபடகையும் மெரைன் பொலிஸார் மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.(ஞா-285)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** ஆவடி இளவாலை, மாரீசன்கூடல், மெய்கண்டான், பெரியவிளான், சேந்தான் குளம், சென். ஜூட் இளவாலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 4 ஆவது மைல் பூநகரி, அரசபுரம், ஞானிமடம் கௌதாரிமுனை, களவெடித்திடல், காஞ்சிபுரம், கறுக்காய்தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முச்சிரன்பட்டி, முட்கொம்பன், முட்கொம்பன் சந்தி, நல்லூர் பூநகரி, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர் கடைச்சந்தி, பள்ளிக்குடா, பள் ளிக்குடா சுனாமித் திட்டம், பரமன்கிராய், பரமன்கிராய், புளியம் பொக்கணை கோவில், செம்மணகுன்று, சின்னபல்லவராயன்கட்டு, தம்பிராய், தரணிக்குடியிருப்பு, வாடியடி பூநகரி, வெட் டுக் காடு (கௌதாரிமுனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை), 66 ஆம் பிரிவு இராணுவ முகாம் பூநகரி, அரசபுரம் இராணுவமுகாம், செல்லையாதீவு பிரதேச செயலகம் பூநகரி, 66 ஆம் பிரிவு இராணுவப் பயிற்சி பள்ளி அரசபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறவந்துலாவ, எல்லப்பர்மருதங்குளம், பழையனூர், ட்ராக்-07, பாவற்குளம், மூன்று முறிப்பு, தரணிக்குளம், குருக்கள் புதுக்குளம்-மணியர்குளம், பெரிய நொச்சிக்குளம், நீராவிபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அத்வைதம், துவைதம்



நீங்கள் கடையில் தேங்காய் வாங்குகிறீர்கள் தேங்காய்க்குள் தண்ணீர் இருக்கிறது. நீங்கள் ஒரு எலுமிச்சம்பழம் வாங்குகிறீர்கள் அதற்குள்ளும் நீர் இருக்கிறது. அதை ஜூஸ் (Juice) என்கிறோம். இதே போல எந்த இடத்தில் நீர் இருந்தாலும் அது நமக்குத் தேவைப்படுவதாகவே உள்ளது. சில இலைகளில் கூட நீர் இருக்கிறது; கசக்கிப் பிழிந்து அதை உபயோகப்படுத்துகிறோம். ஒவ்வொன்றிலிருந்து கிடைக்கும் நீருக்கும், தனித்தனிப் பெயர்களைக் கொடுத்து அவற்றை உபயோகப்படுத்துகிறோம்.

இந்த நீரின் மூலம் என்ன? தேங்காய்க்குள் எப்படித் தண்ணீர் வந்தது? நிலத்திலிருந்து தானே? அப்படியானால் நிலத்திற்கு, பூமிக்கு எப்படித் தண்ணீர் வந்தது? மழையிலிருந்து வந்தது. மழை எப்படி நூரைப் பெற்றது? கடலிலிருந்து, கடல்நீர் ஆவியாகி மேகமாக மாறுவதால் வந்தது.

இதே தத்துவம் தான் எலுமிச்சம் பழத்திலுள்ள நீருக்கும், இலைகளில் உள்ள நீருக்கும் ஏற்றது. தேங்காய்க்குள்ளும் எலுமிச்சம் பழத்திற்குள்ளும், இலைகளுக்குள்ளும், எல்லாவற்றிலும் கடல் நீரைத் தானே காண்கிறோம்? இதுதான் அத்வைதம்.

பரிணாம வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களையெல்லாம் மறந்து [illegible] மூலத்தைப் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூபம் எடுக்கும் கொவிட் தொற்று

## -நிபுணர் சௌமியா தகவல்-

**(ஜெனிவா)**

**கொவிட் பெருந்தொற்றின் வேகம் குறையவில்லை என உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை நிபுணர் சௌமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**




இந்தியா உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் கொவிட் பரவல் குறைந்து வருகிறது. அதேநேரத்தில் ரஷ்யா, வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளில் கொவிட் பாதிப்பு அதிகரித்து வருகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர், நேற்று முன்தினம் 24 மணிநேரத்தில் சுமார் 5 இலட்சம் கொவிட் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. சுமார் 9300 மரணங்கள் பதிவாகியுள்ளன. எனவே பெருந்தொற்றின் வேகம் குறையவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனம், உலகை ஆறு பகுதிகளாகப் பிரித்துள்ள நிலையில், இந்த ஆறு பகுதிகளில் ஐந்தில் கொவிட் பாதிப்புகள் அதிகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆபிரிக்காவில் கொவிட்டால் பாதிக்கப்பட்டு உயிரிழப்பவர்களின் சதவீதம், இரண்டு வாரங்களில் முப்பதிலிருந்து நாற்பதாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ள சௌமியா சுவாமிநாதன், டெல்டா வகை கொவிட் வேகமாகப் பரவுவது, உலகம் முழுவதும் தடுப்பூசி செலுத்தப்படுவதில் வேகம் குறைவாக இருப்பது, முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி உள்ளிட்ட கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அளிக்கப்பட்டது ஆகியவை கொவிட் பாதிப்புகள் மீண்டும் அதிகரிப்பதற்கான காரணங்கள் என்றும் தெரிவித்தார். (நி-5)

# டெங்கு காய்ச்சலால் உயிரிழந்த மாணவன்

(பதுளை)

டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டு, பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த 19 வயதுடைய பாடசாலை மாணவனொருவன் உயிரிழந்துள்ளார்.

ஹாலி-எல வித்தியாலயத்தில் கல்வி கற்கும் குறித்த மாணவன், இம்முறை உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ளவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,பதுளை பொது வைத்தியசாலையில் அதிகமானோர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் இவர்களுள் சிலர் பதுளை- ஹிந்தகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# 30 அடி உயரத்தில் இருந்து மண்மேடு சரிந்து விழுந்தது

(ஹற்றன்)

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குட்பட்ட கிரன்லி மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று பெய்த கடும் மழை காரணமாக அதிகாலை 4 மணியளவில் குடியிருப்புக்கு பின்புறத்தில் உள்ள சுமார் 30 அடி உயரத்தில் இருந்து மண்மேடு சரிந்து விழுந்ததில் வீடு முற்றாக சேதம் அடைந்துள்ளது.எ

அத்தோடு வீட்டில் நித்திரையிலிருந்த இரண்டு முதியவர்கள் சுவர் இடிந்து விழுந்த போது அதில் சிக்கினர்.

பொதுமக்களின் உதவியுடன் எவ்வித பாதிப்பும் இல்லாமல் அவர்கள் உயிருடன் மீட்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

# சரத் வீரசேகரவின் கருத்தை மறுத்துள்ள பொதுச் சுகாதார ஆய்வாளர்கள்

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு துறை அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றில் கூறிய கூற்றை பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் மறுத்துள்ளனர்.

இதனையடுத்து நீதிமன்றங்களால் பிணை வழங்கப்பட்ட பின்னரும் எதிர்ப்பாளர்களை, தனிமைப்படுத்தல் மையங்களுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்ல பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் சட்டபூர்வமான தன்மை குறித்து கடுமையான அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இரண்டு வெவ்வேறு ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்களை, பொலிஸார் கைது செய்தனர். இதில் சிலரை மாத்திரம் நீதிமன்றம் பிணை வழங்கிய பின் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

தனிமைப்படுத்தல் மையங்களுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டவர்களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அனைத்திலங்கை பல்கலைக்கழக கூட்டமைப்பின் ரத்கராவ்வே ஜினாரத்தன தேரர் மற்றும் முன்னணி சோசலிசக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ ஆகியோர் அடங்குகின்றனர்.

தொற்று நெருக்கடி காரணமாக மேலதிக அறிவிப்பு வரும் வரை பொதுக்கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை அனுமதிக்கக் கூடாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொலிஸ்மா அதிபருக்கு அளித்த அறிவுறுத்தல்களை மேற்கோளிட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் பொதுச்சுகாதார ஆய்வாளர்கள் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையில் ஆர்ப்பாட்டக்காரர்களை தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றில் தெரிவித்த கூற்றை, பொதுச்சுகாதார ஆய்வாளர்கள் மறுத்துள்ளனர்.

பொதுச்சுகாதார ஆய்வாளர் சங்கத் தலைவர் உபுல் ரோஹன, நீதிமன்றில் பிணை வழங்கப்பட்ட எதிர்ப்பாளர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று தமது உறுப்பினர்கள் பரிந்துரைக்கவில்லை என்று தெரிவித்தார்.

எந்தவொரு போராட்டக்காரர்களையும் அத்தகைய முறையில் தனிமைப்படுத்த வேண்டும் என்று பகுதி மருத்துவ சுகாதார அலுவலர் அல்லது பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் பரிந்துரைக்க முடியாது.

யாரைத் தனிமைப்படுத்தலாம் என்பதில் கடுமையான வழிகாட்டுதல்கள் உள்ளன என்று உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். (நி-5)

# 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் 9 மாவட்டங்களுக்கு பகிர்வு

(கொழும்பு)

நேற்றைய தினம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகளில் 5 இலட்சம் கம்பஹா மாவட்டத்திற்கும் 3 இலட்சம் களுத்துறை மாவட்டத்திற்கும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நுவரெலியா, பதுளை, மாத்தளை, அநுராதபுரம், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் வீதம் வழங்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டிற்கு மேலும் 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# தோட்டாக்கள், அங்கிகள் பொலிஸாரால் மீட்பு



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரச் சோலை பகுதியில் சட்ட ரீதியற்ற முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டு தோட்டாக்கள், மேலங்கிகள் உட்பட சில பொருட்களை நேற்று பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# 38 இலட்சத்து 96 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இதுவரை கொரோனாத் தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் இதுவரை 38 இலட்சத்து 96 ஆயிரத்து 184 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக நேற்று முன்தினம் மாத்திரம் ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 510 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன்தினம் 34 ஆயிரத்து 555 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.இதேவேளை, நாட்டில் இதுவரை 3 இலட்சத்து 85 ஆயிரத்து 647 பேருக்கு கோவி சீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவனை...

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் துணுக்காய் வீதியில் உதயசூரியன் நகர்ப் பகுதியில் வசிக்கும் விஜயகுமார் விதுசன் எனும் 14 வயதுடைய மாங்குளம் மகா வித்தியாலய மாணவன் நேற்று முன் தினம் இரவு முதல் காணாமல்போயுள்ளார்.

குறித்த மாணவன் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் குளிப்பதற்காக செல்வதாக சென்ற மாணவனை காணவில்லை என மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஞா-281)

## யாழில் 423...

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கோவிட்-19 புள்ளிவிபர அறிக்கையின் அடிப்படையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த மாதத்தின் முதல் ஒன்பது நாட்களில் மேலும் 423 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து ஜுலை 9 வரையான நாட்களில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5,749 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, ஜுலை 1 முதல் 9 வரையான நாட்களில் மட்டும் 12 கோவிட்-19 மரணங்கள் யாழ்.மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் ஜுலை 9 வரை கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 107 ஆக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா-18)

## அரசின் சர்வாதி...

நிலை ஏற்படும்.

ஆகவே அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாட்டைக் கண்டித்து இனி போராடுவோம் என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றி பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் பொதுமக்கள் முன்னெடுத்த போராட்டத்தை பாதுகாப்புத் தரப்பினரே அமைதியற்ற போராட்டமாக மாற்றியமைத்தார்கள் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

பொதுமக்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்த்துவிடும் அடக்கு முறைமைகள் ஜனநாயக கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. நாட்டில் தற்போது ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடுகள் அரச அதிகாரத்துடன் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. கோவிட் - 19 வைரஸ் தாக்கத்தை குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (ஞா)

## எதிர்ப்பாளர்களை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை நிலைநிறுத்தும் போர்வையில் தொழிற்சங்கத் தலைவர்கள், மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் நடத்திய பல போராட்டங்களை குழப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்றார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பலவந்தமாக தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு அனுப்பப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பவங்களை கண்டிப்பதாக தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செய்த தியாகங்களை இலங்கை பொதுஜன பெரமுன மறந்துவிட்டது என்றார்.

2025ஆம் ஆண்டில் சுதந்திர கட்சி தலைமையிலான அரசாங்கத்தை நிறுவ தேச பக்தர்களின் ஆதரவுடன் ஒரு பரந்த இடதுசாரித்துவ கூட்டணி உருவாக்கப்படும் என்றார்.

சமூகத்தின் பரந்துபட்ட தரப்பினரின் ஆதரவுடன் அடுத்த அரசாங்கத்தை அமைப்பதில் நம்பிக்கை இருப்பதாக கூறினார். (ஞா)

## கொரோனா...

துள்ளது.

இதனால் இதுவரை இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,502 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## +1,492...

யாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 274,523 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 18 பேருக்கு...

தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெரு சின்ன ஒழுங்கை பகுதியில் நேற்று முன் தினம் 23 கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர். இதையடுத்து அந்தப் பகுதி முடக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சின்ன ஒழுங்கை, கொட்டடிப் பகுதிகளில் 72 பேரின் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

இதன் முடிவுகள் நேற்று வெளியாகின. இதில் 18 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. (ஞா)

## மக்களின் ஆர்ப்...

செல்லக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றுகூடல்கள் மறுஅறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளன. குறித்த தடைகளைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகள் கொரோனாக் கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக் கூடாது என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார். (ஞா)

## சாவகச்சேரி...

மீசாலை வடக்கு, இராமாவில் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு முன்பாக உள்ள காணி ஒன்றில் காணப்பட்ட சிறிய நாவல் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது சடலம் குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30)

## மாணவர்கள்...

வன் ஒருவர், மாணவி ஒருவர் என இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் உட்பட 185 பேருக்கு நேற்று முன்தினம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் 173 பேருக்கு தொற்றில்லை என்றும் 12 பேர் மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவுகள் வெளிப்படுத்தியிருந்தன.

இந்நிலையில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மீளவும் 12 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

முடிவுகளின் அடிப்படையில் மாணவன் ஒருவர், மாணவி ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே மேலும் ஒரு வருக்கு மீளவும் பரிசோதனை [illegible] என்று மருத்துவ அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது. (ஞா)

## முழு அமைச்சர...

மானது என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் விதிகளின்படி அமைச்சர்கள் அமைச்சரவையில் மீண்டும் பதவியேற்க வேண்டியிருந்தாலும், இதுபோன்ற பதவியேற்புகள் இதுவரை நடைபெறவில்லை என்று சோபித தேரர் சுட்டிக்காட்டினார்.

நேற்று எம்பிலிப்பிட்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது சோபித தேரர் இதனைத் தெரிவித்தார். (ஞா)

## பொலிஸார்...

கிடைத்துள்ளது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் அவ்விடத்திற்கு சென்றனர். இந்த நிலையில் குறித்த வீட்டு பெண்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் இளைஞன் ஒருவர் அவ்விடத்திற்கு வந்தபோது, வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண்கள் அந்த இளைஞன்தான் தங்களது வியாபாரம் தொடர்பான தகவலை பொலிஸாருக்கு வழங்கியதாக தெரிவித்து பொலிஸாருக்கு முன்னால் அந்த இளைஞனை தாக்கினர்.

இதனால் காயமடைந்த அந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட பெண்களை பொலிஸார் கைது செய்ய முற்பட்ட போது அவர்களது உறவினரான அயல் வீட்டில் வசிக்கும் ஆண் ஒருவர் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததோடு பொலிஸாரைத் தாக்கியுள்ளார்.

இதன்போது அந்த ஆணும் இளைஞனை தாக்கிய பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா-104)

தன நிதானய
திகதி - 2021.07.11
சீட்டிழுப்பு இலக்கம் - 532
Y 25 45 46 54

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2797
M 31 41 69 72

மஹஜன சம்பத
திகதி 2021/07/11
சீட்டிழுப்பு இலக்கம் 4502
M 9 3 6 1 4 0

மெகா பவர்
திகதி 11/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0850
W 03 07 18 67 70

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1305
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 11.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 135,371,553
வெற்றி இலக்கங்கள் 40 42 64 69 D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சீட்டிழுப்பு இல: 3640
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 11.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,705,830
வெற்றி இலக்கங்கள் 31 40 46 71 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,937,082/=
திகதி: 11.07.2021
வெற்றி வாரம்: 3191
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் 05 11 17 28
மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,836,580/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1479
சீட்டிழுப்பு திகதி 11/07/2021
நிறம் சிவப்பு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் T 08 16 46 77
அடுத்த சுப்பர் ஜக்பொட 58,020,128/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**ராஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (7188)

# யாழ். குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக
## நீதிபதி பிரேமசங்கர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மீண்டும்



யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் இந்த நியமனத்தை இன்று திங்கட்கிழமை நடைமுறைக்கு வரும்வகையில் வழங்கியுள்ளார் என்று அறியமுடிகிறது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சுமார் 10 மாதங்களின் பின்னர் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வை மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், தாவூத் லெப்பை அப்துல் மனாப் ஆகிய இருவரும் இன்று திங்கட்கிழமை முதல் முன்னெடுப்பார்கள்.

இதேவேளை 2018 மே 26 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா-33)

# கந்தர்மடம் பலாலி வீதியில் தண்ணீர்க்குழாய் வெடிப்பு
## கவனிப்பார் யாருமில்லை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஆலடிச்சந்திக்கு அண்மையாக பலாலி வீதியில் நிலத்தடிக் குடிநீர்க் குழாய் வெடித்து தண்ணீர் ஓடிய வண்ணம் இருக்கின்ற போதிலும் இன்று வரை நீர்க் குழாய் வெடிப்புத் திருத்தப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு கிழமையாக குறித்த நீர்க்குழாய் வெடித்து குடி தண்ணீர் வீணே ஓடிக்கொண்டிருக்கின்றபோதிலும் இது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. (ஞா)

**வாகனக் கதவு தவறிவிட்டது**
மகேந்திரா வாகனத்தின் பின் பக்க ஒற்றைக் கதவு வரணி - சுட்டிபுரம் பகுதியில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து
077 864 6738 என்ற தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.
**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536
**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-2321)

**உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை**
DHL உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது.)
Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 038 5584 (7183)

# மரண அறிவித்தல்



பிறப்பு 08 - 04 - 1993

இறப்பு 11 - 07 - 2021

## சிவகுமாரன் கஜேன்
(சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்)

மீசாலை வடக்கு இராமாவில் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் கஜேன் நேற்று (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிவகுமாரன் - செல்வரஞ்சினி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி - நாகம்மா மற்றும் செல்வரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் பேரனும் கல்யாணி, கஜதீபன், கபிலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன், தயானி, நிமலினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற திவ்வியா, திசானன், திலக்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிசன், அஷ்வின், அபிஷன் ஆகியோரின் சித்தப்பாவும் சிவகுமாரி, சிவநாயகி, செல்வானந்தம், செல்வநாதன், செல்வராசா ஆகியோரின் மருமகனும் சிவதாசன், சிவதரன், செல்வஜோதி, செல்வரஜினா, செல்வஜசோதா, செல்வலலிதா, செல்வயாழினி, செல்வதர்சினி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.07.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2334)

தகவல்:-
மீசாலை வடக்கு,
இராமாவில், கொடிகாமம்.
077 605 3610

நவீன இயந்திரத்தின் மூலம் மிகக் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும்.
மதுசாலினி அரைக்கும் ஆலை
பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமை, இணுவில்.
070 494 3990 (7154)

**கனடா-STUDENT VISA**
A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2329)
IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

**விற்பனைக்கு**
மாங்குளம் துணுக்காய் பிரதான வீதியில் வன்னி விளாங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடும் 2 ஏக்கர் காணியும் எதிர்ப் பக்கமாக 3 ஏக்கர் வயல்க் காணியும் விற்பனைக்கு உண்டு.
077 959 0634 (C-2332)

**காணி விற்பனை**
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட (யாழ். நகரில் இருந்து 11/2 Km தூரம்) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்துக் கொடுக்கப்படும்.) (7191)
1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும்
076 221 2037, 076 734 1023
070 064 2661

**DEWMAS JOB BANK**
வேலையாட்கள் தேவையா?
074 138 3368
யாழ். வேலை வாய்ப்புகளுக்கு
dewmasweb.com
51, Amman Road, Nallur. (7069)

**மணமகன் தேவை**
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (6782)
☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

**அன்னா** EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணம் வரிகள் ஏதும் இல்லை
15,000/= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-2307)
0768226240 DHL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.